பக்கங்கள் – 16
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 134

புதன்கிழமை
09 ஏப்ரல் 2025

பங்குனி 26 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

புதன்பொய்கை

**தமிழ்த் தேசிய உரிமையை பாதுகாப்பதற்கு ஒன்றிணைக**

கஜேந்திரகுமார் எம்.பி. அழைப்பு

>> 08

அரசாங்கத்தின் முட்டாள்தனத்தால்

# பேரழிவை நோக்கி நகர்கின்றது நாடு!

சஜித் எச்சரிக்கை



கொழும்பு, ஏப்ரல் 9

ஜனாதிபதி அநுர தலைமையிலான அரசாங்கத்திடம் முறையான வேலைத்திட்டங்கள் இல்லை. ஆதலால், நாடு பொருளாதாரப் பேரழிவை நோக்கி நகர்ந்து செல்கின்றது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தெரிவித்தார்.

15

## அர்ஜுன் மகேந்திரனை நாட்டுக்கு அழைப்போம்

முயற்சிகள் கைவிடப்படவில்லை
அநுர அரசாங்கம் அறிவிப்பு

கொழும்பு, ஏப். 9

மத்திய வங்கியின் பிணைமுறி மோசடியுடன் தொடர்புடையவர் எனச் சந்தேகிக்கப்படும் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரனை நாட்டுக்கு

15

## புத்தாண்டுக்குப் பின் உ/த பெறுபேறுகள்!

>> 07

பதில் பொலிஸ்மா அதிபர்

## தென்னக்கோனை விசாரிக்கக் குழு!

நாடாளுமன்றில் தீர்மானம்

கொழும்பு, ஏப். 9

பதில் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோனை பதவிநீக்கம் செய்வது தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்வதற்கு சிறப்புக் குழு

15

## இந்தியாவுடனான ஒப்பந்தத்தால் இலங்கைக்கு ஆபத்து இல்லை!



வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 9

இந்தியாவுடனான பாதுகாப்பு ஒப்பந்தம் இலங்கையின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்

15

## அமெரிக்க வரிகள் தொடர்பில் ட்ரம்புக்கு ஜனாதிபதி கடிதம்!

கொழும்பு, ஏப். 9

அமெரிக்க அரசாங்கத்தின் புதிய வரிகள் தொடர்பில், அமெரிக்க அதிபர் ட்ரம்புக்கு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க கடிதம் அனுப்பியுள்ளார் என்று பிரதியமைச்சர் அனில் ஜயந்த தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

15

## அமெரிக்க வரிகளுக்கு இராஜதந்திரத் தீர்வுகள்

அரசாங்கம் நம்பிக்கை

கொழும்பு, ஏப். 9

அமெரிக்காவின் பரஸ்பர வரிவிதிப்பால் ஏற்பட்டுள்ள பிரச்சினையை இராஜதந்திர மற்றும் பொருளாதார ரீதியிலான தலையீடுகள் மூலம்

15

## வவு. பல்கலையில் மருத்துவ பீடம்?

சாத்தியக்கூறுகள் ஆராய்வு

>> 06

## பிள்ளையான் கைது!



கொழும்பு, ஏப். 9

முன்னாள் இராஜாங்க அமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் நேற்று செவ்வாய்க்கிழமை மாலை கைது செய்யப்பட்டுள்ளார்.

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவரான அவர் மட்டக்களப்பில் உள்ள கட்சியின் தலைமைக் காரியாலயத்தில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கொழும்பிலிருந்து சென்ற குற்றப்புலனாய்வுத் திணைக்

15

## மாடுகடத்தல் மூவர் கைது!

20 மாடுகள் மீட்பு

வவுனியா, ஏப். 9

வவுனியா பூவரசங்குளம் பகுதியில் மாடுகளைக் கடத்திச் சென்ற குற்றச்சாட்டில், மூவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

15



முச்சந்தி முரளி

'பிள்ளையான் பிடிபடுறதும் பிறகு பிணையில வாறதும் வழக்கம் கண்டியளோ.'

## மருத்துவமனையில் சிவாஜிலிங்கம்

யாழ்ப்பாணம், ஏப். 9

தமிழ்த் தேசியக் கட்சியின் செயலாளர் நாயகமான சிவாஜிலிங்கம், திடீர் சுகவீனம் காரணமாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற தமிழ்த் தேசியப் பேரவையின் வேட்பாளர் அறிமுக நிகழ்வில் கலந்துகொண்ட பின்னரே, அவருக்கு திடீர் சுகவீனம் ஏற்

15

## பயங்கரவாதத் தடைச்சட்டத்தை பயன்படுத்துவது மிக அவசியமே!

தாளத்தை மாற்றுகிறது அரசாங்கம்

கொழும்பு, ஏப்ரல் 9

விரும்பினாலும், விரும்பாவிட்டாலும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தைப் பயன்படுத்தவேண்டிய நிலைமையே தற்போது காணப்படுகிறது என்று ஸ்ரீலங்கா அரசாங்கம் அறிவித்துள்ளது.

இது தொடர்பில் அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ மேலும் தெரிவித்ததாவது:-

திட்டமிட்ட குற்றச்செயல்கள் தொடர்பான விசாரணைகளின் போது, சந்தேகநபர்கள் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டு விசாரணைக்

15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 57 பேர் உயிரிழப்பு

காஸாவில் இஸ்ரேல் நேற்று நடத்திய கொடூரமான வான் தாக்குதலில் 57 பேர் உயிரிழந்துள்ளனர் பலஸ்தீன போர்க் கண்காணிப்பகங்கள் அறிக்கையிட்டுள்ளன. (ம)

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 08.04.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4042 |
| ஆங்கில எழுத்து | P |
| வெற்றி இலக்கங்கள் | 24 43 51 73 |
| விசேட எழுத்து | P |

| ஹந்தஹன ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 08.04.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1109 |
| வெற்றி இலக்கினம் | மேஷம் |
| வெற்றி இலக்கங்கள் | 01 19 21 46 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 08.04.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0068 |
| ஆங்கில எழுத்து | J |
| வெற்றி இலக்கங்கள் | 2 0 3 1 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 08.04.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2148 |
| ஆங்கில எழுத்து | G |
| சுப்பர் இலக்கம் | 18 |
| வெற்றி இலக்கங்கள் | 06 63 73 80 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 08.04.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 5800 |
| ஆங்கில எழுத்து | Q |
| வெற்றி இலக்கங்கள் | 8 3 0 7 4 4 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 08.04.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1830 |
| ஆங்கில எழுத்து | V |
| வெற்றி இலக்கங்கள் | 30 42 67 68 |
| விசேட எழுத்து | V |

# நஷ்டத்தில் இயங்கும் 55 இ.போ.ச.டிப்போக்கள்

கொழும்பு, ஏப்.9

**இலங்கைப் போக்குவரத்துச்சபைக்குச் சொந்தமான 109 டிப்போக்களில் 55 டிப்போக்கள் நஷ்டத்தில் இயங்குகின்றன என்று அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.**

நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றும்போதே அவர் இந்த விடயத்தைக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நஷ்டத்தில் உள்ள டிப்போக்களை மேம்படுத்த பல புதிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருகின்றன. திறமையற்ற முகாமையாளர்களை நீக்கி திறமையான முகாமையாளர்களை நியமித்தல், அதிகபட்ச அட்டவணைகளை இயக்குதல், பேருந்துச் சேவைகளின் எண்ணிக்கையை அதிகரித்தல், ஊழியர்களை ஊக்குவிக்க சம்பளத்தைத் திருத்துதல், ஊழியர்களுக்கு விழிப்புணர்வுப் பயிற்சிப் பட்டறைகள் நடத்துதல், ஒவ்வொரு டிப்போவிற்கும் நாளாந்த இலக்குகளை வழங்குதல், மாதாந்தக் கணக்குகளை ஆய்வு செய்து எதிர்கால நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் உள்ளிட்ட பல நடவடிக்கைகளில் தற்போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது- என்றார். (ச-இ)

| சுபிரி தன சம்பத | | |
|---|---|---|
| திகதி | தினம் | வெற்றி வாரம் |
| 08.04.2025 | செவ்வாய்க்கிழமை | 0508 |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | |
| L | 2 4 7 4 3 3 | |

| Super Ball | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 08.04.2025 | செவ்வாய்க்கிழமை | |
| சீட்டிழுப்பு வாரம் | ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் |
| 2774 | Y | 13 36 68 69 |

| சனிதா | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 08.04.2025 | செவ்வாய்க்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| K | 26 28 47 50 | 4935 |

| SASIRI | |
|---|---|
| திகதி | தினம் |
| 08.04.2025 | செவ்வாய்க்கிழமை |
| வெற்றி வாரம் | வெற்றி இலக்கம் |
| 0660 | 09 36 48 |

| லக்ன ராசி | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 08.04.2025 | செவ்வாய்க்கிழமை | |
| தனுசு | வெற்றி இலக்கம் | சீட்டிழுப்பு வாரம் |
| ♐ | 13 18 21 40 | 4486 |

| KAPRUKA | | | |
|---|---|---|---|
| திகதி | தினம் | | |
| 08.04.2025 | செவ்வாய்க்கிழமை | | |
| ஆங்கில எழுத்து | சுப்பர் இலக்கம் | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| W | 29 | 02 46 50 59 | 1950 |

| அத கோடிபதி | | |
|---|---|---|
| திகதி | தினம் | |
| 08.04.2025 | செவ்வாய்க்கிழமை | |
| ஆங்கில எழுத்து | வெற்றி இலக்கம் | வெற்றி வாரம் |
| P | 20 35 47 63 | 2600 |

## குருநாகலில் தீ விபத்து நால்வர் பலி

கொழும்பு, ஏப். 9

குருநாகல் எரிபொருள் நிலையம் ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் நால்வர் உயிரிழந்துள்ளனர். மேலும் நால்வர் காயமடைந்துள்ளனர். குறித்த தீ விபத்து வெஹர பகுதியில் உள்ள எரிபொருள்நிலையம் ஒன்றிலேயே நேற்றுமுன்தினம் நள்ளிரவு இடம்பெற்றுள்ளது.

தீ விபத்துக்கான காரணம் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை என்றும் மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றும் குருநாகல் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-இ)

## வீடுகள் இல்லாதோர் கொழும்பில் உயர்வு

கொழும்பு, ஏப். 9

நாட்டில் வீடற்றவர்களில் அதிக எண்ணிக்கையிலான மக்கள் மேல் மாகாணத்தில் வசிப்பது தெரியவந்துள்ளது. அதிகபட்சமாக 536 பேர் கொழும்பு மாவட்டத்தில் வசிக்கின்றனர்.

மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிவரத் துறையால் வெளியிடப்பட்ட 2024 ஆம் ஆண்டுக்கான மக்கள் தொகை மற்றும் வீட்டுவசதிக் கணக்கெடுப்பின் அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை வீடுகளற்றோர் வசிக்கும் குறைந்த மாகாணமாக கிழக்கு மாகாணம் பதிவாகியுள்ளது.

வடக்கு மாகாணத்தின் கிளிநொச்சி மாவட்டத்தில் வீடற்றவர்கள் யாரும் இல்லை என்றும் மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிவரத்துறை தனது அறிக்கையில் தெரிவித்துள்ளது. (ச-இ)

## பொய்கூறும் அரசாங்கம் சிந்தித்து வாக்கிடுங்கள்!

*நானாட்டான் வேட்பாளர் தெரிவிப்பு*

மன்னார், ஏப். 9

இந்த அரசாங்கம் மீண்டும் மீண்டும் பொய்கூறி உள்ளூராட்சிமன்றத் தேர்தலிலும் வெற்றிபெற முனைகின்றது. எனவே எதிர்வரும் உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் சிந்தித்து தெளிவாக வாக்களிக்கவேண்டும் என்று சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் மன்னார் மாவட்ட அமைப்பாளரும், நானாட்டான் பிரதேசசபையின் வேட்பாளருமான என்.எம்.எம். பாரிஸ் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது அனைவரும் மகிழ்ச்சியுடன் எதிர்பார்த்த விடயம், ஜனாதிபதியாக அநுரகுமார திஸாநாயக்க தெரிவு செய்யப்பட்டால் நாட்டில் மாற்றம் ஏற்படும். அந்த மாற்றத்தின் ஊடாக மக்களுக்கு விமோசனம் கிடைக்கும் என்பதாகும்.

ஆனால் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்கு வாக்களித்த மக்கள் அனைவரும் தற்போது தலையிலே கையை வைத்துக் கவலைப்படுகின்றனர். மக்கள் தற்போது திணறிக் கொண்டு இருக்கிறார்கள். எனவே இந்தச் சந்தர்ப்பத்தில் தற்போது உள்ளூராட்சிமன்றத் தேர்தல் ஒன்று வந்துள்ளது. மக்கள் இந்தத் தேர்தலில் தெளிவாக இருக்கவேண்டும் - என்றார். (ச-56)

# அமெரிக்கா புதிய வரி; ஜூலியுடன் விஜித சந்திப்பு

கொழும்பு, ஏப். 9

அமெரிக்காவின் புதிய வரிவிதிப்பு தொடர்பில் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் மற்றும் அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் ஆகியோருக்கிடையில் கலந்துரையாடல் நேற்று இடம்பெற்றுள்ளது.

கலந்துரையாடல் குறித்து அமெரிக்கத்தூதுவர் ஜூலி சங் தனது 'எக்ஸ்' தளத்தில் தெரிவித்ததாவது:

அமெரிக்காவுடன் இலங்கையின் வர்த்தக உறவைச் சமநிலைப்படுத்துவது தொடர்பாக வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்துடன் பயனுள்ள கலந்துரையாடல் நடைபெற்றது.

அமெரிக்கா ஏற்றுமதிகளுக்கு ஈடான அணுகுமுறை வழங்கும் முக்கியத்துவத்தை நான் இதன்போது வலியுறுத்தினேன்.



நியாயமான, சமநிலைபடுத்தப்பட்ட வர்த்தக உறவு பொருளாதார வளர்ச்சியை ஆதரிப்பதுடன் வேலை வாய்ப்புகளை உருவாக்குவதுடன் இரு நாடுகளிலும் தொழிற்றுறைகளை வலுப் படுத்துகிறது - என்றுள்ளார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதி அபிவிருத்திகளின் நிறைவு இவ்வாண்டுக்குள் சவாலானதே

## வடமாகாண பிரதம செயலாளர் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், ஏப். 9**

**வடமாகாணத்துக்கென ஒதுக்கப்பட்ட 5000 மில்லியன் ரூபாவின் கீழான வீதி அபிவிருத்தித் திட்டங்கள் இந்த வருடத்துக்குள் நிறைவு செய்வது சவாலானதாக அமையும் என வட மாகாண பிரதம செயலாளர் இளங்கோவன் தெரிவித்துள்ளார்.**

'சூம்' செயலியின் ஊடாக ஆளுநர் ஊடகப் பிரிவினால் ஏற்பாடுசெய்யப்பட்ட ஊடக சந்திப்பு அண்மையில் இடம்பெற்றது.

இதன்போது ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவால் வட மாகாணத்தின் கிராமிய வீதிகளை அபிவிருத்தி செய்வதற்காக ஒதுக்கப்பட்ட 5000 மில்லியன் ரூபாவின் கீழான திட்டங்களுக்கு பணம் கிடைக்கப்பெற்றதா? பட்டியல் இறுதிசெய்யப்பட்டு விட்டதா? ஏற்கனவே மாகாணசபை நிதிகளைத் திருப்பி அனுப்புவதாக குற்றச்சாட்டுகள் உள்ளன? உள்ளிட்ட கேள்விகள் எழுப்பப்பட்டது.

இதற்குப் பதிலளித்த வட மாகாண பிரதம செயலாளர்,

வீதிப்பட்டியல்கள் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்களின் ஊடாக இறுதி செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றன. நெடுஞ்சாலைகள் அமைச்சில் இது சார்ந்த கூட்டம் இடம்பெற்றது. குறித்த திட்டத்தின் கீழ் இரண்டு பிரதேசங்களில் இரு வீதிகளின் புனரமைப்புப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன -றஎன்றார். (ச-125)



# சீதுவையில் துப்பாக்கிச்சூடு ஒருவர் பலி

நீர்கொழும்பு சீதுவைப் பிரதேசத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் பதிவாகியுள்ளது.

துப்பாக்கிச்சூட்டில் 51 வயதுடைய நபரொருவர் படுகாயமடைந்து சிகிச்சைக்காக நீர்கொழும்பு மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர். (ச-இ)

# இலங்கைக்கான ஐ.எம்.எப்.பின் புதிய செயல் தலைவராக இவான்

கொழும்பு, ஏப். 9

சர்வதேச நாணய நிதியம், இலங்கைக்கான புதிய செயல் தலைவராக இவான் பாபஜெர்ஜியோ என்பவரை நியமித்துள்ளது.

இலங்கையின் பொருளாதார மீட்பு முயற்சிகளில் பிரதான பங்கு வகித்து தனது பதவிக்காலத்தை முடித்துக்கொண்ட, பீட்டர் ப்ரூயருக்குப் பின்னர் புதிய செயல் தலைவராக இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

தற்போது அந்தப் பொறுப்பை ஏற்கும் இவான், சர்வதேச நாணய நிதியத்தின் ஆசிய மற்றும் பசிபிக் துறையில் துணைப்பிரிவுத் தலைவராக பணியாற்றுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)



# மோடியின் புறப்பாடு சட்டவிரோதமானது

## ஆய்வாளர்கள் தகவல்

கொழும்பு, ஏப். 9

இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி இலங்கையிலிருந்து புறப்பட்டுச் சென்றமை சட்டவிரோதமாகக் காணப்படுகின்றது என்று ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

பிரதமர் நரேந்திரமோடி அநுராதபுரம் விமான நிலையத்திலிருந்து இந்திய விமானப்படை விமானத்தில் இராமேஸ்வரத்துக்குப் புறப்பட்டுச்சென்றார். அநுராதபுரம் விமான நிலையத்திலிருந்து புறப்பட்டுச்செல்வதற்காக அநுராதபுரம் விமான நிலையம் தற்காலிகமாக ஒரு நாள் சர்வதேச விமான நிலையமாக மாற்றப்பட்டது. இவ்வாறு தற்காலிகமாக ஒரு நாள் சர்வதேச விமான நிலையமாக மாற்றுவதை வர்த்தமானியில் பிரசுரிக்கப்படவேண்டும். ஆனால் இந்த விடயம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படவில்லை என்றும் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். (ச-6)

# காற்றின் தரம் ஆரோக்கியம்

கொழும்பு, ஏப். 9

நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் நேற்று காற்றின் தரம் ஆரோக்கியமான நிலையில் காணப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தின் சுற்றாடல் கற்கைகள் பிரிவு அத்துடன் வாகனப் புகைப்பரீட்சை நம்பிக்கை நிதியம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

கொழும்பு 07, யாழ்ப்பாணம், குருணாகல், வவுனியா, காலி, இரத்தினபுரி, எம்பிலிப்பிட்டிய, புத்தளம், பதுளை, பொலன்னறுவை மற்றும் அநுராதபுரம் ஆகிய இடங்களில் காற்றின் தரம் மிதமான நிலையில் இருக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



## புத்தாண்டை முன்னிட்டு

# பொருள்கள் விலை சதொசவில் குறைப்பு

கொழும்பு, ஏப். 9

சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு அத்தியாவசிய உணவுப்பொருள்கள் உள்ளிட்ட 500 வகையான பொருள்களின் விலைகளைக் குறைத்துள்ளதாக வர்த்தக அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் வர்த்தக அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவிக்கையில்,

அரிசி, டின் மீன், சிவப்பு சீனி, பெரிய வெங்காயம் உள்ளிட்ட பல்வேறு அத்தியாவசிய பொருள்களை சந்தை விலையை விடவும் மிகக்குறைந்த விலையில் சதொச ஊடாக இம்மாதம் முழுவதும் பெற்றுக்கொள்ளமுடியும் - என்றார். (ச-இ)




உதவி செய்யிறதெண்டாலும், அதையும் ஒரு வரன்முறையோடதான் செய்யோணும் போல இருக்கு. ரண்டு சின்னப்பிள்ளையளோட ஒரு குடும்பம் 'எங்களுக்கு இருக்க வீடில்லை, அதிகாரியள் ஏமாத்துகினம், அநுர அரசாங்கம் தான் வழி செய்யோணும்' எண்ட பனரைப் பிடிச்சுக்கொண்டு நிக்கிற படமொண்டு பேஸ்புக்கில பரவிக் கொண்டிருக்குது. நடுறோட்டில இப்பிடிச் சின்னப்பிள்ளையளோட, இருக்க இடமில்லாமல் ஒரு குடும்பம் பரிதவிச்சுக்கொண்டிருந்தால், பார்க்கிறவைக்கு கவலையாத்தான் இருக்கும். அப்பிடிப் பாவம் பார்த்துத்தான் ' இந்தப் படத்தைப் பார்த்தாவது ஆரும் உதவிசெய்யட்டும்' எண்ட நல்லெண்ணத்தில அவையைப் படமெடுத்து பேஸ்புக்கிலையும் போட்டிருக்கினம். ஆனால் அடுத்தவை தங்களில காட்டுற இரக்கத்தை ஆதாயமாக்கிறவையும் இருக்கினம். அப்பிடிப்பட்டவர்தான் அந்த வீடில்லாக் குடும்பத்தின்ர தலைவர் எண்டு கன பக்கங்களில இருந்தும் கதை வருகுது.

இந்தக் குடும்பம் கிட்டடியில ஆளுநரிட்டையும் போயிருக்கினம். அங்க இருந்தவையும் இவையின்ர பரிதாபக் கதையையும், சின்னப் பிள்ளையளையும் பார்த்திட்டு, ஏதாவது செய்யோணும் எண்டு யோசிச்சிருக்கினம். வடமராட்சி கிழக்கில இவைக்கு அரசகாணியைக் குடுக்கிறதுக்கும் ஒழுங்குகள் பார்த்துக்குடுத்து, அங்க போறதுக்கு பஸ்ஸூக்கும் காசு குடுத்து அனுப்பி வைச்சவை. வடமராட்சி கிழக்குப்பிரதேச செயலரும் ' உங்களுக்கு அரசகாணி தாறதுக்கு கொஞ்சநாள் ஆகும். அதுவரைக்கும் மாற்று ஒழுங்கும் செய்யிறம். அதைவிட உங்களுக்கு என்.ஜீ.ஓ. நிறுவனங்களிட்ட சொல்லி வேற உதவியளும் எடுத்துத்தாறம்' எண்டு அவைக்குச் சொல்லியிருக்கிறார். ஆனால் அந்தக் குடும்பம் என்ன நினைச்சினமோ தெரியாது, அங்க இருந்து ஒரு மீடியாவிட்ட போய் தங்களுக்கு உதவிசெய்யச் சொல்லிக் கேட்டிருக்கினம், அவையும் ஆளுநர் ஒப்பீஸூக்கு போன் எடுத்து, 'இந்தக் குடும்பத்துக்கு உதவுசெய்ய ஏலுமோ எண்டு கேட்டிருக்கினம். அப்பதான் ஆளுநர் அலுவலகக்காரரர் அவைக்கு அரசகாணிக்கும், வேற உதவியளுக்கும் ஏற்பாடுசெய்து குடுத்திட்டமே, பிறகேன் உங்க வந்தவை ?' எண்டு கேட்டிருக்கினம். அதுக்குப் பிறகுதான் அந்த மீடியாக்காரருக்கு உண்மை விளங்கியிருக்கு. 'ஆளுநர் ஒப்பீஸ்காரரர் எல்லா ஒழுங்கும் செய்து தந்திட்டினமாமே. பிறகேன் இஞ்சையும் வந்து உதவி கேக்கிறியள்?' எண்டு கேக்க, அவையிட்ட பதிலில்லையாம்.

சுவரில அடிச்ச பந்துமாதிரி அடுத்தநாள் திரும்ப ஆளுநர் அலுவலகம் போயிருக்கினம். வடமாராட்சி கிழக்கில காணி வேண்டாமெண்டால், மாங்குளம் பக்கம் காணி எடுத்துக் குடுப்பம் எண்டு நினைச்சு , ஆளுநரும் அங்கத்தை பிரதேசசெயலரோட கதைச்சிருக்கிறார். அப்பதான் இப்பிடி குடும்பத்தோட வீடு கேட்டு வந்தவர், முந்தி மாங்குளப் பக்கத்தில இருந்தவர் எண்டும், சில பிரச்சினையளால சனம் அவரை அங்க இருந்து கலைச்சுப்போட்டினம் எண்டும் தகவல் கிடைச்சிருக்குது. அதால அவருக்கு அங்க அரசகாணியோ, தற்காலிக இருப்பிடமோ குடுக்கேலாது. அங்கதான் காணி குடுக்க ஏலாட்டி, தீவகப் பக்கம் பிரச்சினை இல்லைத்தானே எண்டிட்டு, வேலணைப் பிரதேச செயலர் மூலமா காணிகுடுக்க ஒழுங்கு செய்திருக்கினம். இப்ப காணியும் இருக்கு, அதைக் குடுக்க அதிகாரியளும் தயார். ஆனால் அதைவாங்கப் போக இந்தக் குடும்பத்தின்ர தலைவருக்கு மனமில்லை. சிலவேளை இப்பிடிச் சின்னப்பிள்ளையளோட நிக்கிற படத்தைப் போட்டால், வெளிநாட்டுக்காரர் மனமிரங்கி உதவி செய்வினம் எண்டு அந்தக் குடும்பத்தலைவர் நினைக்கிறாரோ தெரியேலையே.

padsi@uthayan.com - பட்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** எதிர்பாராத செலவுகள் அதிகரித்தாலும், தேவையான பணம் கையில் இருப்பதால், உற்சாகமாகச் சமாளித்துவிடுவீர்கள். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். குடும்ப விஷயமாக சற்று அலைச்சலும் செலவுகளும் ஏற்படும்.

**இடபம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். சிலருக்கு நண்பர்களிடம் எதிர்பார்த்த பணம் கிடைக்க வாய்ப்பு உண்டு. வாழ்க்கைத்துணைவழி உறவுகளிடம் எதிர்பார்த்த காரியம் நல்லபடியாக முடியும். உறவினர்கள் மூலம் மகிழ்ச்சிதரும் செய்தி கிடைக்கும்.

**மிதுனம்:** இன்று எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்கள் வாங்கும் யோகம் உண்டாகும். சகோதரவகையில் சுபச்செலவுகள் ஏற்படக் கூடும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும்.

**கடகம்:** உறவினர்கள் மூலம் மகிழ்ச்சிதரும் செய்தி கிடைக்கக்கூடும். சுபநிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளும் வாய்ப்பு ஏற்படும். தாய்வழி உறவுகளால் நன்மை உண்டாகும். மற்றவர்களுடன் பேசும்போது பொறுமையைக் கடைப்பிடிக்கவும்.

**சிம்மம்:** தேவையான பணம் கையில் இருக்கும். காரியங்கள் முடிவதில் தாமதம் ஏற்பட்டாலும் முடித்துவிடுவீர்கள். இளைய சகோதரர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சிலருக்கு தெய்வப் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வாய்ப்பு உண்டாகும்.

**கன்னி:** தந்தைவழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். சகோதரர்களுக்காக செலவு செய்யவேண்டிவரும். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும். மாலையில் குடும்பத்துடன் அருகில் உள்ள ஆலயத்துக்குச் சென்று வழிபாடு செய்வீர்கள்.

**துலாம்:** உற்சாகமான நாள். எதிர்பார்த்த பணம் கைக்கு வரும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். உங்கள் முயற்சிகளுக்கு வாழ்க்கைத்துணை ஒத்துழைப்புத் தருவார். பிள்ளைகளின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள்.

**விருச்சிகம்:** தெய்வ அனுக்கிரகம் நிறைந்த நாள். காரியங்களில் சிறுசிறு தடைகள் ஏற்பட்டாலும் முடிந்துவிடும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உண்டு. கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**தனுசு:** தந்தைவழி உறவுகளால் சில பிரச்னைகள் ஏற்பட்டு நீங்கும். குடும்பம் தொடர்பான முக்கிய முடிவு எடுப்பதில் பெரியவர்களின் ஆலோசனை அவசியம். நண்பர்களிடம் எதிர்பார்த்த காரியம் முடிவதில் தாமதம் ஏற்படும்.

**மகரம்:** சிலருக்கு தாய்வழி உறவினர்களால் தேவையற்ற பிரச்சினைகள் ஏற்படக்கூடும். தாயின் உடல்நலனில் கவனம்தேவை. மாலையில் நண்பர்கள் மூலம் கேட்கும் செய்தி உங்களை உற்சாகப்படுத்தும்.


**கும்பம்:** சகோதரர்களுக்காக செலவு செய்யவேண்டி வரும். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்களின் சேர்க்கை உண்டாகும். மாலையில் குடும்பத்துடன் அருகில் உள்ள ஆலயத்துக்குச் சென்று வழிபாடு செய்வீர்கள்.

**மீனம்:** எதிர்பார்த்த பணம் கைக்குவரும். எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். உறவினர்கள் வகையில் சிற்சில சங்கடங்களைச் சமாளிக்கவேண்டி வரும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

# பிரியன்ஸ் ருத்ர தாண்டவம் சென்னைக்கு நேற்றும் அடி!


**ஐ.பி.எல். தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் பஞ்சாப் பின் ஆரம்ப வீரர் பிரியன்ஸின் அபாரமான ஆட்டத்தால், சென்னை சுப்பர் கிங்ஸ் படுதோல்வியடைந்தது.**

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பஞ்சாப் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. பிரியன்ஸ் ஒருமுனையில் ஆட்டமிழக்காது நின்றாலும், மறுமுனையால் விக்கெட்டுக்கள் சரிந்த வண்ணம் இருந்தன. பிரப்சிம்ரன் சிங், ஸ்ரேயஸ், ஸ்ரொய்னிஸ், மக்ஸ்வெல், நிஹால் வதேரா அடுத்தடுத்து ஒற்றையிலக்கங்களுடன் ஆட்டமிழந்தனர். ஆனால், பஞ்சாப்பின் இன்னிங்ஸில் பதற்றம் இல்லை. பிரியன்ஸ் வாண வேடிக்கை காட்டிக் கொண்டிருந்தார். அவரின் பிடியெடுப்புகளும் தவறவிடப்பட சென்னை அணிக்குப் பேரிடிகள் மாறிமாறி விழுந்தன. 39 பந்துகளில் சதம் கடந்தார் பிரியன்ஸ். 103 ஓட்டங்களுடன் அவர் ஆட்டமிழந்தார். ஷசாங் சிங், மார்கோ ஜான்சன் இருவரும் கடைசிக் கட்ட அதிரடியைக் காட்ட பஞ்சாப் அணி 6 விக்கெட்டுக்களை இழந்து 219 ஓட்டங்களைக் குவித்தது.



பதிலுக்குக் களமிறங்கிய சென்னை அணிக்கு ஆரம்ப வீரர் ரச்சின் ரவீந்திரா, கொன்வே இருவரும் இலக்கை எட்டும் படியான ஆரம்பத்தை வழங்கினார்கள். அணி 61 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஆட்டமிழந்தார் ரச்சின். அணித் தலைவர் ஹெய்க்வாட் ஓர் ஓட்டத்துடன் பவிலியன் திரும்பினார். கொன்வே 69 ஓட்டங்களைப் பெற்றாலும், இதற்காக அவர் 49 பந்துகளை எதிர்கொண்டார். டோனி கடைசிக் கட்டத்தில் அதிரடிகாட்ட எத்தனித்தார். ஆனால், அதற்குள் அனைத்தும் கடந்திருந்தது. முடிவில் 5 விக்கெட்களை இழந்து 201 ஓட்டங்களைப் பெற்றது சென்னை. 18 ஓட்டங்களால் வென்றது பஞ்சாப். (ம)

# லக்னோ போராடி வெற்றி!



ஐ.பி.எல். தொடரில் நேற்று மாலை நடைபெற்ற ஆட்டத்தில், பெரும் போராட்டத்துக்கு மத்தியில் கொல்கத்தாவை வீழ்த்தியது லக்னோ.

முதலில் துடுப்பெடுத்தாடிய லக்னோ பூரனின் அதிரடி காரணமாக 3 விக்கெட்டுகளை இழந்து 238 ஓட்டங்களைக் குவித்தது. அதிகபட்சமாக பூரன் 36 பந்துகளில் 87 ஓட்டங்களைக் குவித்தார். மிச்செல் மார்ஷ் 81 ஓட்டங்களையும், மார்க்ரம் 47 ஓட்டங்களையும் பெற்றனர்.

பதிலுக்குக் களமிறங்கிய கொல்கத்தாவும், ஆரம்பம் முதல் அதிரடியைக் கையிலெடுத்து மிரட்டியது. சுனில் நரைன் 13 பந்துகளில் 30 ஓட்டங்களையும், அணித் தலைவர் ரகானே 35 பந்துகளில் 61 ஓட்டங்களையும், பெற்றுக்கொடுத்து அணியைப் பலப்படுத்தினார். வெற்றியை எட்டிப்பிடிக்கும் வகையில் கொல்கத்தாவின் ஆட்டம் நகர்ந்தது. வெற்றிக்கு நெருக்கமாகச் சென்றபோதிலும் கொல்கத்தாவால் 234 ஓட்டங்களையே பெறமுடிந்தது. முடிவில் 5 ஓட்டங்களால் வென்றது லக்னோ. (ம)




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# புலிபாய்ந்தகல் பகுதியில் சட்டவிரோதமாக வாடிகள்

## நடவடிக்கை எடுக்க ரவிகரன் எம்.பி. வலியுறுத்து

முல்லைத்தீவு, ஏப்.9

**முல்லைத்தீவு, புலிபாய்ந்தகல் பிரதேசத்தில் தென்னிலங்கை மீனவர்கள் அத்துமீறி வாடி அமைக்க முற்பட்டுள்ள நிலையில், அதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.**

அங்குள்ள தமிழ் மீனவர்களின் வாடிகள் சிலவற்றை அடாவடியாக அகற்றி, பெரும்பான்மையின மீனவர்கள் அத்துமீறி வாடி அமைக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளனர் என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது. வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் து.ரவிகரன் கடந்த வெள்ளிக்கிழமை அந்தப் பகுதிக்குச் சென்று உரிய தரப்பினருடன் கலந்துரையாடியுள்ளார். பெரும்பான்மையின மீனவர்களால் அத்துமீறி அமைக்கப்பட்ட வாடிகளை அகற்றுவதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளார்.

சில நாள்களுக்கு முன்னர் புலிபாய்ந்தகல் பிரதேசத்தில் பெரும்பான்மையின மீனவர்கள் முல்லைத்தீவு மாவட்டக் கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள எத்திடமோ, கரைத்துறைபற்றுப் பிரதேச செயலக காணி பிரிவிடமோ அனுமதி பெறாது வாடிகளை அமைத்திருந்தனர். அனுமதிபெறாது படகு ஒன்றும் அங்கு நிறுத்தப்பட்டிருந்தது. இது தொடர்பில் கரைதுறைபற்றுக் காணி உத்தியோகத்தருக்கு நாடாளுமன்ற உறுப்பினர் து.ரவிகரன் தெரியப்படுத்தியதுடன், உடனடியாக நடவடிக்கை எடுக்கவும் வலியுறுத்தினார். கொக்குத்தொடுவாய் வடக்குக் கிராம அலுவலரையும் சம்பவ இடத்துக்கு அழைத்து நிலைமைகளைக் காண்பித்ததுடன், உடனடி நடவடிக்கை எடுக்குமாறும் தெரிவித்திருந்தார். முல்லைத்தீவு கடற்றொழில் நீரியல் வளத்திணைக்கள உதவிப் பணிப்பாளர் க. மோகனகுமாருடனும் தொலைபேசியில் தொடர்புகொண்டு இந்த விடயத்தைத் தெரிவித்திருந்தார். சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள வாடிகளை அகற்றுவதற்கான துண்டுப்பிரசுரம் காட்சிப்படுத்தப்படும் என்று பிரதேச செயலகக் காணி உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார். அனுமதி பெறாது நிறுத்தப்பட்டுள்ள படகு தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாவட்டக் கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் உறுதியளித்துள்ளார். (எ-33)

# சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஏப்.9

சைவ வாழ்வியலில் திருவாசகம் பெறும் முக்கியத்துவம் தொடர்பில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் நடத்தப்படும் வாராந்தத் திருவாசகச் சிறப்புச் சொற்பொழிவுத்தொடர் எதிர்வரும் வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு தெல்லிப்பளை சிவகாமி அம்பாள் சமேத சந்திரமௌலீஸ்வரர் ஆலய பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சிவநெறிப்பிரகாசர் சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கம் ஒழுங்கமைப்பில் நடைபெறும் இந்தத் தொடர் நிகழ்வில், மாணிக்கவாசக சுவாமிகள் குரு வணக்கத்தைத் தொடர்ந்து இளஞ்சைவப்புலவர், பிரசங்கச்சுடர் த. மனோஜ் குமார் "மாணிக்கவாசகரும் திருவாசகமும்" எனும் விடயப்பொருளில் சொற்பொழிவாற்றவுள்ளார். சொற்பொழிவில் இருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப்பரிசில்கள் வழங்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ இ)

★★★★★

யாழ்ப்பாணம், ஏப்.9

நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானம் நடத்தும் வாராந்தச் சுக்கிரவாரக் கந்தபுராண படனத் தொடர் சொற்பொழிவு ஆலய சண்முக விலாச மண்டபத்தில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

சிவநெறிப்பிரகாசர் கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறும் நிகழ்வில், ஆலயத்தின் பிரதம குருக்கள் சிவஸ்ரீ இராஜேந்திர சுவாமிநாதக்குருக்களின் ஆசியுரையைத் தொடர்ந்து தலைமையுரையை பரிபாலன சபைத்தலைவர் சி. தயாநாதன் ஆற்றுவார். சிறப்புச்சொற்பொழிவை சைவப்புலவர் ச. முகுந்தன் "தாரகன் வதைப் படலம்" எனும் விடயப்பொருளிலும்ஆற்றுவுள்ளார்.

சொற்பொழிவில் இருந்து நீர்வைக் கந்தன் புராண இதிகாசப் பாடசாலை மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ-இ)

# மருந்தாளரை நியமிக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப்.9

யாழ். வடமராட்சி கிழக்கு நித்தியவெட்டை ஆரம்ப சுகாதார மருத்துவமனைக்கு மருந்தாளர் ஒருவரை நியமிக்கவேண்டும் என்று கட்டைக்காடு கிராம அபிவிருத்திச்சங்கம் வடக்கு ஆளுநரிடம் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளது.

நித்தியவெட்டை ஆரம்பப்பிரிவு மருத்துவமனையில் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. மருந்தாளர் இன்றிக் கடமையில் இருக்கும் மருத்துவர் சிரமங்களை எதிர்கொள்கிறார். நோயாளர்களின் நிலையைக் கருத்திற்கொண்டு, தகுதியான ஒரு மருந்தாளரை உடனடியாக நியமிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அந்தக் கடிதத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (எ4127)

# நீர்ப்பாசனத்திணைக்கள ஊழியர்கள் கவனவீர்ப்பு

கிளிநொச்சி, ஏப்.9

சமூக வலைத்தளங்களில் பகிரப்படும் உண்மைக்குப் புறம்பான செய்திகளுக்குக் கண்டனம் தெரிவித்து கிளிநொச்சி மேற்கு பிரிவு நீர்ப்பாசனத் திணைக்கள ஊழியர்கள் நேற்றுமுன்தினம் கவன வீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கிளிநொச்சிமேற்குப் பிரிவு நீர்ப்பாசனத் திணைக்கள ஊழியர் ஒருவர் கடந்தவாரம் தவறான முடிவெடுத்து உயிரிழந்திருந்தார். அவரது மரணத்துக்கு அந்தப் பிரிவின் பொறியியலாளரே காரணம் என்று சமூக வலைத்தளங்களில் உண்மைக்குப் புறம்பான தகவல்கள் பரப்படுகின்றன என்று நீர்ப்பாசனத் திணைக்கள ஊழியர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

இவ்வாறு உண்மைக்குப் புறம்பான செய்திகள் பரப்பப்படுவது திணைக்களத்தை அவமதிக்கும் செயற்பாடு என்றும், அதற்குக் கண்டனம் தெரிவித்தும் உத்தியோகத்தர்கள் கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர். (எ-113)



# கடற்பசு இறைச்சியுடன் மன்னாரில் ஒருவர் கைது

மன்னார், ஏப்.9

மன்னார், வங்காலை அக்னேஸ்புரத்திலுள்ள வீடொன்றில் மேற்கொள்ளப்பட்ட சோதனையில் கடற்பசு இறைச்சியுடன் சந்தேகநபர் ஒருவர் வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்கள அதிகாரிகளால் கடந்த ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

மன்னார் வனஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்கள அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. சந்தேகநபரிடம் இருந்து ஒரு கிலோ கடற்பசு இறைச்சி கைப்பற்றப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது. சந்தேகநபர் மன்னார் நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளார். (எ-இ)

# சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணிகள் மாகாண மட்டத்துக்கு


யாழ்ப்பாணம், ஏப்.9

சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் வலைப்பந்தாட்ட அணிகள் மாகாண மட்டப் போட்டிகளுக்குத் தெரிவாகியுள்ளன. சண்டிலிப்பாய் இந்துக்கல்லூரி மைதானத்தில் கடந்த வெளிக்கிழமை இடம்பெற்ற வலயமட்ட வலைப்பந்தாட்டப்போட்டியில் சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் 20வயதுப் பிரிவு முதலாம் இடத்தையும், 16 வயதுப்பிரிவு இரண்டாம் இடத்தையும், 18 வயதுப் பிரிவு மூன்றாம் இடத்தையும் பெற்று மாகாணமட்டப் போட்டிகளுக்குத் தெரிவாகியுள்ளன. (எ-33-63)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யோகர் சுவாமிகளின் 61 ஆவது குருபூஜை

யாழ்ப்பாணம்,ஏப். 9

ஈழத்துச் சித்தர் பரம்பரையில் முக்கியமானவராக திகழும் தவத்திரு.யோகர் சுவாமிகளின் 61 ஆவது ஆண்டு குருபூஜை நிகழ்வு யாழ். கொழும்புத்துறை யோகர் சுவாமிகள் சமாதி ஆலயத்தில் நேற்றுமுன் தினம் திங்கட்கிழமை பக்திபூர்வமாக நடைபெற்றது. கூட்டுப்பிரார்த்தனை வழிபாடுகளைத் தொடர்ந்து முற்பகல் 10.30 மணியளவில் யோகர் சுவாமிகளின் சமாதிக்கு சிறப்பு அபிஷேக ஆராதனை வழிபாடுகள், பூஜை வழிபாடுகள் இடம்பெற்றன. அதனைத் தொடர்ந்து யோகர் சுவாமிகளின் குருபூஜை நிகழ்வை முன்னிட்டு வடக்கு மாகாணப் பாடசாலை மாணவர்கள் மத்தியில் நடத்தப்பட்ட நற்சிந்தனைப் பாராயணப் போட்டி, பேச்சுப் போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு ஒருங்கிணைப்பாளரும், ஆசிரியருமான செ.லோகேஸ்வரன் தலைமையில் இடம் பெற்றது. நிகழ்வில் கோப்பாய் சுப்பிரமணிய கோட்ட முதல்வர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகள், பேராதனைப் பல்கலைக்கழக விரிவுரையாளரும், ஆசிரியருமான சைவப்புலவர் ஏ.அனுசாந்தன், ஓய்வு நிலை அதிபர் ஆ.சிவநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ச-22,66)

வவுனியாப் பல்கலையில்

# மருத்துவபீடம் அமைக்க சாத்தியக்கூறுகள் ஆராய்வு

வவுனியா, ஏப். 9

**வவுனியாப் பல்கலைக்கழகத்தில் மருத்துவபீடத்தை ஆரம்பிப்பதற்கான சாத்தியக்கூறுகளை ஆராயும் கலந்துரையாடல் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே. மஸ்தான் தலைமையில் பல்கலைக்கழக வளாகத்தில் நேற்று நடைபெற்றது.**



பல்கலைக்கழகத்துக்கு மருத்துவ பீடம் அமைக்கப்படுமாயின், அதற்கான நிதிப்பலத்தைப் பெற்றுக் கொள்வது தொடர்பிலும், அதன் சாத்தியக்கூறுகள் தொடர்பிலும் நாடாளுமன்ற உறுப்பினரால் கருத்துகள் முன்வைக்கப்பட்டன.

வவுனியா பல்கலைக்கழகத்தில் மருத்துவபீடம் ஆரம்பிப்பதன் மூலம் வவுனியா மாவட்ட வளர்ச்சி மற்றும் வவுனியா மருத்துவமனையின் வளர்ச்சித்திட்டங்கள் உட்பட பல்வேறு வளர்ச்சி முனைப்புகளை ஏற்படுத்தமுடியும்.

இதற்காக ஒரு குழு அமைக்கப்பட்டுள்ளதுடன் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அனுமதியைப் பெறுவதற்கான ஏற்பாட்டுத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றும் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே. மஸ்தான் தெரிவித்தார். கலந்துரையாடலில் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர், வவுனியா பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் ஏ. அற்புதராஜா, நாடாளுமன்ற உறுப்பினரின் பிரத்தியேகச் செயலாளர், பல்கலைக்கழகத்தின் துறைத்தலைவர்கள், மருத்துவர்கள், பிரதேச செயலாளர், சட்டத்தரணிகள், பல்கலைக்கழகச் செயற்பாடுகளில் ஆர்வமுள்ளவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ச-41-110)



கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் வேலணைப் பிரதேச செயலகப் பிரிவிலுள்ள ஐந்து கலைஞர்களுக்குப் பிரதேச செயலரால் தலா 10 ஆயிரம் ரூபா வீதம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை வழங்கிவைக்கப்பட்டது. (ச-25,9)



# பொலிஸாரிடமிருந்து தப்பித்த சந்தேகநபர்

கிளிநொச்சி, ஏப்.9

கிளிநொச்சி கிருஸ்ணபுரம் பகுதியில் மோட்டார் சைக்கிளில் வந்த ஒருவரைப் பொலிஸார் வழிமறித்து சோதனையிட்ட போது சந்தேகநபர் தப்பிச்சென்றுள்ளார்.

இந்த நிலையில் மோட்டார் சைக்கிளிலிருந்து 100 கிராம் 80 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளே பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேகநபரைக் கைது செய்யும் நடவடிக்கைகளை கிளிநொச்சிப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ச-25,28)



# மாவிட்டபுரத்தில் இசைவகுப்புகள்

யாழ்ப்பாணம், ஏப்.9

மாவிட்டபுரத்தில் இசைவகுப்புகள் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை பங்குனி உத்தரத்தன்று ஆரம்பமாகவுள்ளன. இசை ஆர்வலர்கள், மாணவர்கள் 0729336581 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு இசைப்பயிற்சியில் பங்கேற்பதற்கான பதிவுகளை மேற்கொள்ளலாம். வாய்ப்பாடு, வயலின், வீணை, புல்லாங்குழல், மென்டொலின் என்பன கற்பிக்கப்படும். என்.எஸ்.உருத்திராபதி, கலாபூஷணம் இராஜமணி சிங்கராஜா, கலாபூஷனம் தர்மவதி குமாரசுந்தரம் ஆகியோரால் வளர்த்துவந்த பரம்பரைக் கலையையும் பாரம்பரிய கலாசாரத்தையும் யாழ்.மண்ணில் வளர்க்கும் நோக்கில் இந்தச்சேவை முன்னெடுக்கப்படுகின்றது. (ச-41)

# சந்திப்பு

வடக்கு மாகாணத்தின் புதிய கடற்படைத் தளபதியாகக் கடமையேற்ற ரியல் அட்மிரல் எஸ்.ஜே.குமார, மரியாதை நிமித்தமாக யாழ். மாவட்டப் பதில் செயலர் மருதலிங்கம் பிரதீபனை நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை சந்தித்துக் கலந்துரையாடினார். (ச-22)

# கணித, விஞ்ஞானப் பிரிவுகளுக்கு மாணவரை உள்ளீர்க்கும் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஏப். 9

உயர்தர மாணவர்களை கணித மற்றும் விஞ்ஞானப் பிரிவுகளில் உள்ளீர்க்கும் முகமாக, அகில இலங்கை சைவ மகா சபையினால் விழிப்புணர்வுக் கருத்தரங்கு கடந்த சனிக்கிழமை சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரியில் நடத்தப்பட்டது. வடக்கு-கிழக்கில் வாழும் தமிழ் மாணவர்கள் கணித, விஞ்ஞானப் பிரிவுகளில் க.பொ.த. உயர்தரப் பிரிவில் கல்வி கற்கும் நிலை பின்தள்ளப்பட்டு வருகின்றமையால், துறைசார்ந்த வேலைவாய்ப்புகளில் சகோதரமொழி இனத்தவர்கள் பணிபுரியவேண்டிய சூழல் ஏற்படுகிறது. அந்தவகையில் கணித, விஞ்ஞானப் பிரிவுகளில் கல்விகற்கும்போது பல்வேறுவகையான வேலைவாய்ப்புகள் கிடைக்கும் என்பதைக் கருப்பொருளாகக் கொண்டு இந்த விழிப்புணர்வுக் கருத்தரங்கு முன்னெடுக்கப்பட்டது.

நிகழ்வில், அகில இலங்கை சைவ மகாசபையின் பொதுச் செயலாளர் பரா நந்தகுமார், சமூக செயற்பாட்டாளர் நல்லதம்பி பொன்ராசா, சமாதான நீதவான் அருள் சிவானந்தன், துறைசார்ந்த ஆசிரியர்கள், மருத்துவர்கள், பொறியியலாளர்கள், மாணவர்கள், பெற்றோர் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ச-41-125)



பூநகரிப் பிரதேசசபைக்கான அஞ்சல்மூல வாக்குச்சீட்டுகள் அஞ்சல் திணைக்களத்திடம் நேற்றுமுன்தினம் கையளிக்கப்பட்டுள்ளன. பூநகரிப் பிரதேசசபையில் அஞ்சல்மூலம் வாக்களிக்க [illegible] தகுதிபெற்றுள்ளனர். (ச-22,113)

# கும்பாபிஷேகம்

சாவகச்சேரி, ஏப்.9

சாவகச்சேரி மட்டுவில் மத்தி சிவன்கோவில் வீதி மணல் ஊர் புன்னையடி வைரவர் தேவஸ்தான மஹா கும்பாபிஷேகம் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை காலை 8.10 முதல் 9 மணிவரையுள்ள சுபமுகூர்த்தத்தில் நடைபெறவுள்ளது.

இன்று புதன்கிழமை காலை 9.30 மணிக்கு கிரியைகள் ஆரம்பமாகவுள்ளன. நாளை வியாழக்கிழமை காலை 9 மணிமுதல் மாலை 5 மணிவரை எண்ணெய்க் காப்புச் சாத்துதல் இடம்பெறவுள்ளது. வெள்ளிக்கிழமை கும்பாபிஷேகத்தைத் தொடர்ந்து அன்னதானமும் வழங்கப்படவுள்ளது. (ச-41)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை



நாளொரு நல்வார்த்தை

தவறு நேர்ந்துவிடுமோ என்று அஞ்சி அஞ்சி
எந்தச் செயலையும் செய்யாமல்
பின்வாங்குவது இழிவானது.

– ஹென்றி போர்ட்–

# பழையவர்களின் பாதையில் புதிய அரசும்?

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த ருஷ்டி என்ற இளைஞர் பிணையில் விடுவிக்கப்பட்டிருக்கின்றார். உள்ளூராட்சித் தேர்தலில் இந்தவிடயம் எதிர்மறைத்தாக்கத்தை ஏற்படுத்தும் என்ற அரசின் அச்சமும், பயங்கரவாதத் தடைச்சட்டப் பிரயோகத்தால் எழுந்த கடும் விமர்சனங்களுமே ருஷ்டியின் விடுவிப்பைச் சாத்தியமாக்கியிருக்கின்றன என்றே கூறவேண்டும். இதன்மூலம் தங்கள் மீதான விமர்சனங்களை, அதிருப்தியை தவிர்க்கலாம் என்று அரசாங்கம் கருதியிருக்கலாம். ஆனால் நாடாளுமன்றில் தற்போதைய அரசாங்கத்துக்குப் பெரும்பான்மைப் பலத்தை வழங்கிய மக்களின் எதிர்பார்ப்பு இதுவல்ல என்பதை அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் புரிந்துகொள்ளவேண்டும்.

தேசிய மக்கள் சக்தி எதிர்க்கட்சி வரிசையில் இருந்தபோது பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்கவேண்டும் என்று கடுமையாகக் குரல் கொடுத்தது -பயங்கரவாதத் தடைச்சட்டத்துக்கு எதிராகப் போராட்டங்களையும் முன்னெடுத்திருந்தது. கடந்த ஜனாதிபதி, நாடாளுமன்றத் தேர்தல் பரப்புரைக்காலத்தில் ஆட்சிக்கு வந்ததும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குவோம் என்று மேடைக்கு மேடை தேசிய மக்கள் சக்தியினரும், தற்போதைய ஜனாதிபதியும் மக்களுக்கு வாக்குறுதியளித்திருந்தனர். ஆனால் அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கம் நாடாளுமன்றப் பெரும்பான்மையுடன் ஆட்சிக்கு வந்து பல மாதங்கள் கடந்துள்ளபோதும், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கும் விடயத்தில் அரசாங்கம் முதல் அடியைக்கூட இன்னமும் எடுத்துவைக்கவில்லை. இது ஒருபுறமிருக்க, தேசிய மக்கள் சக்தியின் ஆட்சியிலும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழான கைதுகள் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. இஸ்ரேலுக்கு எதிரான ஸ்டிக்கர்களை ஒட்டினார் என்ற குற்றச்சாட்டில் தான் ருஷ்டியும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்தார். இப்போது ருஷ்டி பிணையில் வந்தாலும்கூட, இதே பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்யப்பட்டு பல ஆண்டுகளாகச் சிறைகளில் வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியற் கைதிகளை விடுவிக்கவேண்டும் என்று நீண்டகாலமாக விடுக்கப்படும் கோரிக்கைகள் அரசாங்கத்தின் காதுகளில் ஏறவில்லை.

அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கம், கடந்தகாலங்களில் ஆட்சிப்பீடமேறிய அரசாங்கங்களைப் போலன்றி நியாயமாக நடக்கும் என்ற நம்பிக்கையிலேயே நாட்டு மக்கள் வாக்களித்திருந்தனர். ஆனால் ஆட்சிக்கு வந்ததும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கமும், அரசியல் இலாபங்களையே முன்னிறுத்திச் செயற்பட முயல்கின்றது. மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதே மக்களின் அபிமானத்தைப் பெறுவதற்கான வழி. வாக்குறுதியளித்தவாறு பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குவதற்கான காத்திரமான நடவடிக்கைகளை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் விரைவாக ஆரம்பிக்க வேண்டும். அதைவிடுத்து கண்துடைப்புச் செயற்பாடுகள் ஊடாக மக்களை ஏமாற்ற முயன்றால், தேசிய மக்கள் சக்தியும் , பத்தோடு பதினொன்றாக, நிச்சயம் தோல்வியுற்ற அரசாங்கமாகவே மாறும்.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com




## கொழும்புத் துறைமுகத்தின்
# அதானி மேற்குமுனைய செயற்பாடுகள் ஆரம்பம்

கொழும்பு, ஏப். 9

**கொழும்புத் துறைமுகத்தின் மேற்கு சர்வதேச முனையம் அதன் பணிகளை ஆரம்பித்துள்ளதாக அதானி துறைமுகங்கள் நிறுவனம் அறிவித்துள்ளது.**

அதானி குழுமம், இலங்கையின் 'ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ்' நிறுவனம் மற்றும் இலங்கை அரசு ஆகியவற்றின் கூட்டு ஒத்துழைப்பில் இந்த முனையம் அமைக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து அதானி குழுமத்தின் தலைவர் கௌதம் அதானி கூறுகையில்

இந்த அபிவிருத்தித் திட்டத்துக்கென 800 மில்லியன் டொலர் முதலீடு செய்யப்பட்டது. இந்த முனையத்தில் ஆண்டுதோறும் சுமார் 32 இலட்சம் கொள்கலன்களைக் கையாளலாம்.

இந்த முனையம் ஆயிரக்கணக்கான நேரடி மற்றும் மறைமுக வேலைவாய்ப்புகளை உருவாக்கி, இலங்கைக்கு மகத்தான பொருளாதார மதிப்பை அளிக்கும்.

கொழும்பு மேற்கு சர்வதேச முனையத்தின் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளமையானது இந்தியா மற்றும் இலங்கைக்கு இடையிலான பிராந்திய ஒத்துழைப்பில் ஓர் மைல்கல் அடைவாகும் - என்றார். (ச-இ)

# வெளிநாட்டுக் கையிருப்பு அதிகரிப்பு

கொழும்பு, ஏப். 9

இலங்கையின் உத்தியோகப்பூர்வ வெளிநாட்டுக் கையிருப்பு கடந்த மார்ச் மாதத்தில் உயர்ந்துள்ளது என்றும் அந்தத் தொகை 6.51 பில்லியன் அமெரிக்க டொலரை எட்டியுள்ளது என்றும் இலங்கை மத்தியவங்கி வெளியிட்ட அண்மைய தரவுகள் தெரிவித்துள்ளன.

இது பெப்ரவரி மாத இறுதியில் பதிவான 6.08 பில்லியன் அமெரிக்க டொலரிலிருந்து 7.1% அதிகரிப்பைக் குறிக்கிறது. கையிருப்பு வளர்ச்சி நாட்டின் வெளிப்புற நிலையை வலுப்படுத்துவதைக் குறிக்கிறது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)

# அதிபர், ஆசிரியர்களுக்கு சம்பள உயர்வு போதாது

கொழும்பு, ஏப்.9

தமக்கு வழங்கப்பட்ட சம்பள அதிகரிப்பு போதாது எனக்கூறி அதிபர்கள், ஆசிரியர்கள் தொழிற்சங்கங்கள் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடப்போவதாகத் தெரிவித்துள்ளன.

ஏனைய அரச ஊழியர்களுக்கு அதிகரிக்கப்பட்ட அளவு சம்பள அதிகரிப்பே எமக்கும் அதிகரிக்கப்பட்டுள்ளது.

அதாவது 6 ஆயிரம் தொடக்கம் -13 ஆயிரம் ரூபா வரையான சம்பள அதிகரிப்பே எமக்கும் வழங்கப்பட்டுள்ளது. எமது நீண்டகாலப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவில்லை. எமது பிரச்சினைக்குத் தீர்வுகாணப்படாத பட்சத்தில் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடுவது பற்றி ஆராய்ந்து வருகிறோம் என்று இலங்கை ஆசிரியர் சங்கத் தலைவர் பிரியந்த பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். (ச-6)

# சுமத்ராவில் நிலநடுக்கம்

இந்தோனேசியாவின் வடக்கு சுமத்ராவில் சுமார் 5.7 ரிக்டராக நிலநடுக்கம் பதிவாகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. எனினும் சுனாமி எச்சரிக்கை விடுக்கப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (ச-இ)

# புத்தாண்டுக்குப் பின்னர் உ/த பரீட்சைப் பெறுபேறு

கொழும்பு, ஏப். 9

கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையின் பெறுபேறுகள் தமிழ், சிங்களப் புத்தாண்டுக்குப் பின்னர் வெளியிடப்படும் என்று பரீட்சை ஆணையாளர் நாயகம் எச்.ஜே.எம்.சி.அமித் ஜயசுந்தர அறிவித்துள்ளார்.

நாடு முழுவதும் சுமார் 2,312 மையங்களில் பரீட்சை நடத்தப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)

நாளை
வியாழக்கிழமை -பங்குனி- 27
10.04.2025
சுபநேரம் : 07.36- 09.06
ராகுகாலம் : 01.36 - 09.06

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த் தேசிய உரிமையைப் பாதுகாக்கும் நேரமிது

## கஜேந்திரகுமார் எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 9

சிங்களத் தேசியவாதம் விதைக்கப்படுகின்ற நிலையில் தமிழ்த் தேசியவாதத்தை பாதுகாப்பதற்காகவும் தமிழ் மக்களின் இருப்புகளை உறுதிசெய்வதற்குமான ஒரு தேர்தலாக உள்ளூராட்சி மன்றத் தேர்தலை தமிழ் மக்கள் பார்க்க வேண்டும். இந்தப் பொறுப்பை உணரா விட்டால் சரித்திரத்தில் இல்லாமல் ஆக்கப்படுவோம். இவ்வாறு நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்தில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் மற்றும் தமிழர் பேரவை இணைந்து நடத்திய உள்ளூராட்சிமன்ற வேட்பாளர்களுக்கான அறிமுகக்கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி என்கின்ற ஜே.வி.பி.யின் மாயையில் சிக்கி தமிழ் மக்கள் ஒரு பகுதியினர் ஈர்க்கப்பட்டமை உண்மையான விடயம்.

தமிழ்த் தேசிய நிலைப்பாட்டில் இருந்த கட்சிகளை மெல்ல மெல்ல உடைத்து சிங்களத் தேசியத்துக்கு உயிரோட்டம் கொடுப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டார்கள்.

தமிழ் மக்களுக்குத் தேர்தல் காலத்தில் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டதா இல்லையா என்பது தொடர்பில் ஆராய்வதற்காக ஆறு மாத காலங்கள் போதும் என நினைக்கிறேன்.

நாம் தமிழ்த் தேசிய நிலைப்பாட்டில் உள்ளவர்களை இணைத்துக் கொண்டு இந்தத் தேர்தலில் களமிறங்கியுள்ளோம். தமிழ் தேசியத்தை பாதுகாக்கலாம் என்ற நிலைப்பாட் டிற்கு வந்த பின்னரே எமது கூட்டினை அமைக்க வேண்டிய தேவையை உணர்ந்தோம்.

எமது கூட்டானது உள்ளூராட்சி மன்றக் கூட்டாக மட்டும் அமையாது தொடர்ந்து தமிழ்த் தேசிய இருப்பை பாதுகாப்பதற்கும் தமிழினத்திற்கான குரலாகவும் இணைந்து பயணிப்பதாக அமையும்.

ஆகவே தமிழ் மக்கள் தமது உரிமைப் போராட்டத்திற்காக உயிரிழந்த மாவீரர்களின் தியாகங்களை மனதிலிருத்தி வழங்கப்படும் வாக்குகள் உண்மையான தமிழ்த் தேசியத்தைப் பாதுகாப்பதாக அமைய வேண்டும் - என்றார். (ச-26)

**வீடு வாடகைக்குத் தேவை**

நீர்வேலி, கரந்தன் பகுதிகளில் இரண்டு குழந்தைகள் உள்ள குடும்பம் ஒன்றிற்கு வீடு வாடகைக்குத் தேவை.

தொடர்பு:- 076 613 8192

(CS/57937) J-1

## மரண அறிவித்தல்



தோற்றம் 21 . 11 . 1964

மறைவு 07 . 04 . 2025

### செல்வி சந்திரிக்கா கணேஸ்பரன்

(ஓய்வுபெற்ற சங்கீத ஆசிரியை-யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி, யா/மானிப்பாய் சென்ஆன்ஸ் மகாவித்தியாலயம்)

செட்டி வளவு மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி சந்திரிகா கணேஸ்பரன் அவர்கள் கடந்த (07.04.2025) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணேஸ்பரன்-பரமேஸ்வரி தம்பதியரின் அன்புப் புதல்வியும் சியாமளா, ஜீவகன், சபேசன், பிரதாபன், திலீபன் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் சாந்தபவான், வாசுகி, நீரஜா, சுபா (பிரபா), பிரியா ஆகியோரின் மைத்துனியும் சத்தியகுமார், ஜெகத்குமார், வாசுகி, ஈஸ்வரகுமார், கௌரிகுமார், தக்ஷாயினி, வரப்பிரதன், யசோதை, காலஞ்சென்ற ரமணன் ஆகியோரின் மைத்துனியும் காலஞ்சென்ற தேவகுமார், தவப்பிரியா, கோமதி ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான தில்லையம்பலம்-அன்னம்மா, செல்லத்துரை-சிரோன்மணி தம்பதியின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான ஜெகதாம்பாள், கமலாம்பிகை, கேசவராஜன் (முன்னாள் அதிபர், மானிப்பாய் இந்துக்கல்லூரி), சுபத்திராதேவி பரமேஸ்வரன், நகுலாம்பிகை ஆகியோரின் மருமகளும் காலஞ்சென்றவர்களான செல்வமணி (பபாஅன்ரி), தேவசிகாமணி, தவமணி மற்றும் சத்தியதேவி ஆகியோரின் பெறாமகளும் தாரினி, சர்மியா ஆகியோரின் சிறிய தாயாரும் கேசவி, சியாம், ரேனுகா, நந்திகா, சாயிஸ்ரீ ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (10.04.2025) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று தகனக் கிரியைகளுக்காக பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்
077 322 2768, 077 386 7599

(CS 2923) V-1

**மில்லியன்களில் உங்களுடைய இலாபத்தினை குவித்திடுங்கள்.**

இம்முறை சித்திரை புதுவருடத்தில் ஆரோக்கியமான வாழ்வினையும், வியாபாரத்தினையும் தெரிந்தெடுங்கள்.

நீர் சுத்திகரிப்பு இயந்திரத்தை பொருத்தி மில்லியன்களில் உங்களுடைய இலாபத்தினை குவித்திடுங்கள்.

MEGA OFFER





YARL SMART (Pvt) Ltd
341,K.K.S Road, Jaffna.

076 666 5267 / 021 430 0044
077 636 5267 / 074 104 1859

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பொலிஸ் துறையில் மாற்றம்வேண்டும்



## ஜனாதிபதி தெரிவிப்பு

**கொழும்பு, ஏப். 9**

**சட்டம், ஒழுங்கு மற்றும் மேலாதிக்கத்தை உறுதிசெய்வதற்கு இலங்கை பொலிஸ் சேவையில் சாதகமான மாற்றம் அவசியம் என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.**

களுத்துறையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றுகையில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

சட்டத்தின் ஆட்சியை நிலைநிறுத்துவது தொடர்பில் இலங்கை பொலிஸ் துறைமீது குடிமக்கள் நம்பிக்கை வைத்துள்ளனர். அதனைப் பேணுவது பொலிஸ் திணைக்களத்தின் பொறுப்பு.

அரசியல் அதிகாரத்தை மாற்றுவதன் மூலமாக மாத்திரம், ஒரு நாடு வெற்றிபெறாது . அனைத்துத் துறைகளிலும் சாதகமான மாற்றம் தேவை.

பொதுமக்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் பொறுப்பு புதிய பொலிஸ் அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதனைப் பாதுகாக்கும் அதேவேளையில், திட்டமிடப்பட்ட குற்றச் செயல்கள் மற்றும் போதைப்பொருள்களுக்கு இந்த நாடு பலியாக இடமளிக்கக் கூடாது - என்றார்.

(ச-இ)

# மந்திரவாதியென நடித்து ரூ.38 இலட்சம் அபேஸ்

கொழும்பு, ஏப். 9

தீயசக்திகளை நீக்க சடங்குகளைச் செய்வதாகக் கூறி வீடொன்றுக்குச் சென்ற குழுவொன்று அங்கிருந்த 3.8 மில்லியன் மதிப்புள்ள நகைகளுடன் தப்பிச்சென்ற சம்பவம் பதிவாகியுள்ளது.

சிலாபத்தில் முச்சக்கரவண்டி ஓட்டுநராகவுள்ள வீட்டிலேயே இந்தச் சம்பவம் நடந்துள்ளது.

மந்திரக்காரர் சடங்குகளைத் தொடங்கியபோது, அவர்கள் அணிந்திருந்த அனைத்து நகைகளையும் ஒரு பானையில் போட்டு, ஆசிர்வதிக்க, தம்மிடம் ஒப்படைக்குமாறு வீட்டின் உரிமையாளருக்கு அறிவுறுத்தியுள்ளார்.

சடங்குகளுக்குப் பிறகு, மந்திரக்காரர், பானையைத் திருப்பிக் கொடுத்து, வீட்டின் உரிமையாளரிடம் அதை சந்நதி அறையில் வைக்குமாறும், ஐந்து நாள்களுக்கு அதைத் திறக்கவேண்டாம் என்றும் கூறியுள்ளார்.

எனினும் சந்தேகத்தில் அவர் சென்ற பிறகு, வீட்டின் உரிமையாளர் பானையைத் திறந்தபோது அது வெறுமையாக இருப்பதைக் கண்டார். அதனையடுத்து பாதிக்கப்பட்டவர் பதறியடித்துச் சென்று சிலாபம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். முறைப்பாட்டுக்கமைய பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ச-இ)

# வர்த்தகக் கண்காட்சியும் விற்பனைச் சந்தையும்

சாவகச்சேரி, ஏப்.9

தமிழ், சிங்களப் புத்தாண்டை முன்னிட்டுச் சாவகச்சேரிப் பிரதேச செயலக சமுர்த்திப் பிரிவும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவும் இணைந்து நடத்தும் சமுர்த்தி அபிமானி வர்த்தகக் கண்காட்சியும் விற்பனைச் சந்தையும் நிகழ்வு இன்று புதன்கிழமையும் நாளை வியாழக்கிழமையும் காலை 9.30 மணிக்கு சாவகச்சேரி நகராட்சி மன்றப் பொன்விழா மண்டப வளாகத்தில் இடம்பெறவுள்ளன. (ச-41-66,9-28)

# யாழ்.பல்கலையில் நூல் அறிமுக நிகழ்வு

யாழ்ப்பாணம், ஏப். 9

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் துறையின் ஊடகக்கழகம் நடத்தும் மூத்த ஊடகவியலாளர் கணபதி சர்வானந்தாவின் 'உங்களை வெளிப்படுத்துங்கள்' எனும் நூலின் அறிமுக நிகழ்வு இன்று புதன்கிழமை மாலை03 மணியளவில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கலைப்பீடக் கருத்தரங்க மண்டபத்தில் ஊடகக் கழகத் தலைவர் தங்கராசா விதுஷன் தலைமையில் நடைபெறவுள்ளது. (ச-66)

# தேர்த்திருவிழா

யாழ்ப்பாணம், ஏப்.9

சுன்னாகம் தாளையம்பதி ஸ்ரீஹரிஹர புத்திர ஐயனார் ஆலய வருடாந்த மஹோற்சவத் தேர்த்திருவிழா நாளை வியாழக்கிழமை காலை 8.30மணிக்கு இடம்பெறவுள்ளது.

மறுநாள் வெள்ளிக்கிழமை காலை 8.30மணிக்கு தீர்தோற்சவம் தீர்த்தக்கேணியில் இடம்பெறும் என ஆதீனக்கர்த்தாக்கள் தெரிவித்துள்ளனர். (ச-41)

# ஐக்கிய அரபு இராச்சியத்தில் தமிழருக்கு மரண தண்டனை!

## உயிரைக் காப்பாற்றச் சென்றவருக்கு நேர்ந்த துயரம்

ஐக்கிய அரபு இராச்சியத்தில் உள்ள அஜ்மான் மாநிலத்தில், கண்டியைச் சேர்ந்த இளைஞர் ஒருவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

தெய்வேந்திரன் நிக்லஸ் என்ற இளைஞனுக்கே இவ்வாறு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

குறித்த இளைஞர், கத்திக்குத்துத் தாக்குதலில் காயமடைந்த ஒருவரின் வயிற்றில் இருந்த கத்தியை அகற்றிவிட்டு, அவரை மருத்துவமனையில் சேர்த்துள்ளார். எனினும், அந்த நபர் சிகிச்சை பயனளிக்காமல் உயிரிழந்துள்ளார். உதவி செய்வதற்காகச் சென்ற தமிழ் இளைஞருடைய கைரேகை கத்தியில் பதிவான காரணத்தால், அவரே அந்தக் கொலைக் குற்றத்தைப் புரிந்ததாகக் கருதி நீதிமன்றம் மரண தண்டனையை விதித்துள்ளது என்று தமிழ் இளைஞரின் சட்டத்தரணி தெரிவித்துள்ளார்.

குறித்த சம்பவத்தில் பாகிஸ்தானியர் ஒருவருக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. ஆனால், அந்தப் பாகிஸ்தானியரே, கொலைக் குற்றத்தைப் புரிந்தவர் என்றும், தமிழ் [illegible] கப்பட்டவரைக் காப்பாற்றவே முயற்சித்தார் என்றும் அவரின் சட்டத்தரணி மேலும் தெரிவித்துள்ளார்.

அத்துடன், சம்பவ இடத்தில் மூன்று சிங்கள இளைஞர்களும் இருந்துள்ளனர். அவர்கள் தனக்கு எதிராக சாட்சியமளிப்பார்கள் என்ற அச்சத்தால் கொலைக் குற்றவாளியான பாகிஸ்தானியர் பெருமளவு பணத்தை அவர்களுக்கு வழங்கி அவர்களை இலக்கைக்கே அனுப்பி வைத்துள்ளார் என்று தமிழ் இளைஞருக்காக வாதாடி சட்டத்தரணி [illegible] (ம-இ)

# விசேட வசதிகள் துமிந்தவுக்கு இல்லை

கொழும்பு, ஏப். 9

மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் துமிந்த சில்வாவுக்கு வெலிக்கடைச் சிறைச்சாலை மருத்துவமனையில் விசேட வசதிகள் எவையும் வழங்கப்படாது என சிறைச்சாலை ஆணையாளர் காமினி பி. திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

சிறைச்சாலை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ள மிந்த சில்வாவுக்கு உரிய சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பிரிவின்
வேதனையில்
மட்டுமே நாம்
அன்பின் ஆழத்தைக்
காணமுடியும்.

- ஜார்ஜ் எலியட்

புதன் பொய்கை

09.04.2025
புதன்கிழமை

# நீரில் கரையும் காசு!



■ உருத்திரலிங்கம்

சில நாள்களுக்கு முன்னராக எம் மண்ணில் விளையும் ஊடகமொன்று, அத்திபூத்தாற் போன்று மிகவும் துணிகரமுடிவெடுத்து பிரசுரித்த தகவல்களின்படி, நாம் கடன்பட்டு வேளாண்மை செய்வதற்காக அரசு முன்வந்து செய்த இரணைமடு வாய்க்கால் சீரழிந்து போனதை ஒப்பாரி வைக்காத குறையாக எமக்கு அறியத்தந்ததை மறந்திருக்க மாட்டீர்கள்.

இந்த விடயம் தொடர்பில் புதிதாக, பயமறியா இளங்கன்றுகளாக, முளைத்துள்ள எமது மதிப்புக்குரியவர்களும், இம்மண்ணுக்கு அருள்புரிய வந்தவர்களுமான அரசியல் பெருந்தகையினோர் அலட்டிக்கொள்ள முன்வராவிட்டாலும், எமது அரச உயரதிகாரிகளுக்கு 'கடமை' என ஒரு பங்களிப்பு இல்லாமலில்லை. அப்படியானால் அவர்கள் என்ன செய்தார்கள்?. 'இவற்றுக்கு பொறியியலாளர்கள்தான் பொறுப்பு' என தமது இயல்பின் அடிப்படையில் பந்தை அவர்கள் பக்கம் தள்ளிவிட்டு ஓர் அறிக்கையாவது விட்டிருக்கலாம். ஆனால் நாம் காட்டிக்கொடுக்கும் இனமல்ல என மௌனம் சாதித்து விட்டார்கள் போலும். ஆனால் அவ்வதிகாரிகளில் ஒருவர் பொறியியலாளரானால் என்ன செய்வது? இதனைப்பற்றி, நிர்மாணத்துறையில் தன்னாலியன்ற சேவைகளினை ஆற்றிவரும் அரசசார்பற்ற நிறுவனமொன்று, ஆளுநருக்கு 2024ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 19ஆம் திகதி அறிவித்திருந்தாலும், ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுத்ததாக இல்லை. வழமைபோல அதற்குப் பொறுப்பான அமைச்சுக்கு அறிவித்துவிட்டார்.

அமைச்சு அதிகாரியும் உத்தரவுக்குக் கட்டுண்டாற்போல தனது கட்டுப்பாட்டிற்குள் பணிபுரியும் மூன்று பொறியியலார்கள் கொண்ட குழுவொன்றை நியமித்து தனது கடமையைச் 'செவ்வனே' நிறைவேற்றிவிட்டார். கைச்சாத்திடப்படாத அறிக்கை ஒன்று உருவாக்கப்பட்டு ஆளுநருக்கு சமர்ப்பிக்கப்பட்டுவிட்டது. அவரும் பொறுப்பற்ற விதத்தில் அந்த அறிக்கையை ஏற்றுக்கொண்டு எமக்கு மிகுந்த சிரமத்தின் மத்தியில் அனுப்பி வைத்திருந்தார். பாவம்! அவர்தான் என்ன செய்வார்? சாமி விரும்பினாலும் பூசாரி இடம்கொடுக்க வேண்டுமல்லவா!

அமைச்சும் உடனடியாக தலைக்குமேல் ஆபத்திருப்பதினை உணர்ந்து இவற்றிற்கு யார் பொறுப்பு என்று ஒப்பந்த ரீதியாக அறியமுற்படாமல் தமது அறிவுக்கெட்டியவிதத்தில் குறைகள் நிவர்த்தி செய்யும் காலத்தின் வியாக்கியானங்களை சரிவரத் தெளிய முற்படாமல் இரு இடங்களில் உரிய பரிகாரங்களை மேற்கொண்டு, அரச நிதியிலேயே செய்து பூசிமெழுகிவிட்டார்கள் போலும். யாவரும் சௌக்கியமே!

அரச நிதியின் வீண்விரயங்களை இனங்காண்பதற்கு அதிகாரம் கொண்ட கணக்காய்வாளர்களும் நித்திரைவிட்டு எழுவதற்கு முன்னரே யாவற்றையும் சரிசெய்துவிட்டார்கள். இந்தச் சந்தர்ப்பத்தில், நெடுந்தீவில் ஏற்பட்டிருந்த நீர்த்தாங்கி அனர்த்தத்தை நீர்விநியோக வடிகால் அமைப்பின் பொறியியலாளர் பாரதிதாசன், அன்று தற்துணிவு முடிவெடுத்து ஒப்பந்தக்காரரைக் கொண்டே பரிகாரம் செய்தமையை நாம் போற்றத்தான்வேண்டும். இளம் பொறியியலாளர்களுக்கு இந்தநிகழ்வு ஒரு முன்னுதாரணம். எனினும் கைச்சாத்திடப்படாத மேலே கூறப்பட்ட அறிக்கையின் பிரகாரம், ஏற்பட்ட அனர்த்தங்களுக்கு பொறியியலாளரின் கட்டுமான வடிவமைப்பு, நீரின் மேலதிக உதைப்பு, அருகில் உள்ள பாதையில் செல்லும் பாரம்கூடிய வாகனங்கள் ஆகியவையே காரணமாயிருக்கலாம் எனக் கூறினாலும் பாதையில்லாத பக்கத்தில் வாய்க்கால் கட்டுமானம் விழுந்தமைக்கு யாரை நோவது?



இவ்வறிக்கையில் மறைக்கப்பட்டிருந்த உள்ளகக் காரணிகள் வெளிப்படுத்தப்படவில்லை. இவை ஒப்பந்தக்காரரின் தவறுகளை எடுத்துக்காட்டலாம். ஒப்பந்தக்காரருக்கு முறையான வரைபடங்கள் வழங்கப்பட்டிருக்கவில்லை, கோவைகள் தவறவிடப்பட்டுள்ளன எனக் கூறப்பட்டமை, ஒப்பந்தக்காரரை இனங்காணத் தவறியமை, தமது மேற்பார்வை சரிவர நடந்தேறியமையினை ஒப்புக்கொள்ளத் தவறியமை, தேவையான வலுவூட்டல் கம்பிகள் சில இடங்களில் போடத் தவறியமை என பாதிக்கப்பட்ட கமக்காரர்கள் சில பேரின் வாக்குமூலங்களின் அடிப்படையில் ஒப்பந்த முகாமைத்துவத்தில் சில குளறுபடிகள் உள்ளதாக இருக்கிறது.

ஆகவே மேற்கூறப்பட்டவற்றிலிருந்து விசாரித்து விரிவான அறிக்கையொன்றினை நாம் ஆளுநரிடம் கேட்டிருந்தும் அதனை அவர் உதாசீனப்படுத்தாமல் உள்ளக அறிக்கைக்கு மேலாக வெளியார் பங்களிப்பில் ஓர் அறிக்கையைப் பெற்று அரச விதிகளுக்கமைவாக நடவடிக்கைகள் எடுக்க முயற்சித்தால் எதிர்காலத்தில் விவசாயிகளுக்கும் பயனுள்ளதாக இருக்கும். அரச செலவீனங்களையும் குறைக்க வழிகோலும் என்பது மறுக்கப்பட முடியாத உண்மையாகும்.

ஏற்கனவே சுன்னாகம் நிலத்தடியில் கசிவினாலான அனர்த்தங்களைக் கண்டுபிடிப்பதற்காக ஐந்து நிபுணர்களைக் கொண்ட புத்திஜீவிகளின் முடிவு தவறென்பதை நீர் விநியோக வடிகால் சபையின் சமீபத்திய ஆய்வு அறிக்கை நிரூபித்தமையானது எமது விடயத்தில் உள்ளகப் பொறியியலாளர்களின் கூட்டறிக்கையின் தாற்பரியத்தை எமது ஆளுநருக்கு புரியவைக்குமா? பொறுத்திருந்துதான் பார்ப்போமே! ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# டிறிபேர்க் கல்லூரியின் தோற்றமும் வளர்ச்சியும்

யாழ்ப்பாணக் குடாநாட்டில் தென்மராட்சி நீர்வளமும் நிலவளமும் நிறைந்த பிரதேசமாகும். இங்கு வாழ்கின்ற மக்களின் வாழ்வியல் இயற்கையோடு இணைந்தது. தற்சார்புப் பொருளாதாரக் கட்டமைப்பைக் கொண்ட வாழ்க்கை. 16ஆம் நூற்றாண்டு முற்பகுதியில் யாழ்ப்பாணம் தமிழ் அரசர்களால் ஆளப்பட்டது. பின்னர் ஐரோப்பியர்களின் வருகையைத் தொடர்ந்து படிப்படியாக மதமாற்றங்களும் ஆங்கிலக் கல்வியின் ஆரம்பமும் தொடங்கியது. முதலில் இலங்கைத்தீவைப் போர்த்துக்கீசரும் அடுத்து ஒல்லாந்தரும் கைப்பற்றி ஆட்சிபுரிந்தனர். 1796ஆம் ஆண்டில் ஒல்லாந்தர் ஆட்சி முடிவுக்கு வரவே ஆங்கிலேயர் வருகை ஆரம்பமானது. அவர்கள் நிர்வாகத்தைக் கைப்பற்றினர். ஒல்லாந்தர் காலத்தில் நடத்தப்பட்ட கோவிற்பற்றுப் பள்ளிகளைத் தொடர்ந்து நடத்துவதில் இவர்கள் ஆர்வம்காட்டவில்லை. 1816 ஆம் ஆண்டில் அமெரிக்க மிஷனரித் தொண்டர்கள் யாழ்ப்பாணத்தில் காலடி எடுத்துவைத்தனர். முதலில் தெல்லிப்பளையிலும், வட்டுக்கோட்டையிலும் கல்வி, மருத்துவம், சமயம் ஆகிய துறைகளில் அவர்களின் பணி தொடங்கியது. 1820ஆம் ஆண்டில் மானிப்பாய், பண்டத்தரிப்பு, உடுவில் ஆகிய இடங்களில் மிசன் பணிகளை விஸ்தரித்தனர். பல்வேறு பிரதேசங்களிலும் ஆரம்பப் பாடசாலைகளை ஆரம்பித்தனர் சாவகச்சேரியிலும் ஏழு ஆரம்பப் பாடசாலைகள் அமைக்கப்பட்டிருந்தன. இவற்றில் இருநூற்று அறுபத்தேழு மாணவர்கள் கல்வி கற்றதாக மிஷனரி அறிக்கை மூலம் தெரியவருகின்றது. ஆங்கிலேயர் ஆட்சி இலங்கையில் ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்திய பின்பு ஆங்கில அறிவுடையோர் அதிகமாகத் தேவைப்பட்டனர். ஆங்கிலப் புலமையுடையோர் அரசாங்கத்தில் உயர் பதவிகளை வகிக்கக் கூடியதாக இருந்தது. இதன் காரணமாகத் தென்மராட்சியில் ஓர் ஆங்கிலப்பாடசாலை நிறுவப்படவேண்டும் என்ற கோரிக்கையை மக்கள் முன்வைத்தனர். இக்காலத்தில் சாவகச்சேரியைச் சேர்ந்தவரும் வட்டுக்கோட்டை செமினரி என்ற பல்கலைக்கழகக் கல்லூரியில் பயின்றவருமான வண தோமஸ் பீற்றர் ஹன்ற் சாவகச்சேரியில் ஆங்கிலப் பாடசாலையை நிறுவுவதற்கு முன்னின்று உழைத்தார். இவர் சாவகச்சேரியில் கல்விப்பணி செய்த பெரியார். 1834 ஆம் ஆண்டில் பண்டத்தரிப்பில் பணியாற்றிய மருத்துவக் கலாநிதி ஜோன் ஸ்கடர் அவர்களின் முயற்சியினால் சாவகச்சேரியில் ஒரு திருச்சபையும் ஓர் ஆங்கிலப் பாடசாலையும் தோற்றம்பெற்றன. ஆனால் அக்காலத்தில் வேகமாகப் பரவிய கொலரா நோய்த்தாக்கம் காரணமாக 1954ம் ஆண்டிலேயே இப்பாடசாலை மூடப்பட்டது. இந்த இருபது வருட இடைக்காலத்தில் இப்பாடசாலை மூலம் ஏராளமானோர் ஆங்கிலத்தில் புலமைபெற்றனர்.

தொடர்ந்து 1875ஆம் ஆண்டில் வணபிதா W.E டிறிமர் என்ற அமெரிக்க மிசன் தொண்டரின் முயற்சியினால் சாவகச்சேரியில் பொலிஸ், நீதிவானாகப் பணியாற்றிய திரு.ஜேம்ஸ் ஸ்ரூவேட் டிறிபேர்க் என்பவரின் நிதியுதவியுடன் 08.04.1875 இல் ஒரு பாடசாலை ஸ்தாபிக்கப்பட்டது. இப்பாடசாலையே ஸ்தாபகரின் பெயரைத் தாங்கி டிறிபேக் பாடசாலை எனப்பட்டது. இந்நாள் வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டிய நாள். இப்பாடசாலையின் முதல்வராக T.P.ஹன்ற் நியமிக்கப்பட்டு அர்ப்பணிப்பாண சேவை செய்தார். இப்பாடசாலை சாவகச்சேரி நகரின் மத்தியில் அமைந்தமை சிறப்பம்சமாகும். இதன் அமைவிடம் பாடசாலையின் வளர்ச்சிக்கும் செயற்பாட்டிற்கும் மிகப் பொருத்தமானதாகவும் சாதகமானதாகவும் அமைந்தது. 1913ஆம் ஆண்டு வண.து.மு.சின்னத்துரை பாடசாலை நிர்வாகத்தை ஏற்றுக்கொண்டார். இவரது முயற்சியின் பயனாக 1915ஆம் ஆண்டிலேயே மாணவர்கள் எஸ்.எஸ்.எல்.சி (Sneior School Leavign Certiifcate) பரீட்சைக்குத் தோற்றினர் 1923 ஆம் ஆண்டு இப்பாடசாலை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியுடன் இணைக்கப்பட்டது. யாழ்ப்பாணக் கல்லூரியின் அதிபராக இருந்த பேரறிஞர் ஜோன் பிக்னல் கல்லூரி வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தார். இக்காலத்தில் டிறிபேர்க் கல்லூரி அதிபராகப் பொறுப்பேற்றவர் ஈ.எஸ்.ஏபிரகாம். இவரும் பாடசாலை வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டு உழைத்தார். இக்கல்லூரியின் தோற்றத்திற்கும் ஆரம்பக்கட்ட வளர்ச்சிக்கும் காரணகர்த்தாக்களாக இருந்த ஜேம்ஸ் ஸ்ருவேட் டிறிபேர்க், வணபிதா T.P.ஹன்ற், வணபிதா து.மு.சின்னத்தம்பி,எஸ்.ஏபிராகம் ஆகிய நால்வரின் பெயர்களும் கல்லூரி மெய்வன்மைப் போட்டியில் பங்கேற்கும் நான்கு இல்லங்களுக்கும் சூட்டப்பட்டு அவர்கள் நால்வரின் பெயர்களும் அனைவராலும் உச்சரிக்கப்பட்டுவருகின்றது. இது அவர்களுக்கு அளிக்கப்பட்ட மிகப்பெரிய கௌரவமாகும். 1931ஆம் ஆண்டு ஈ.எஸ்.ஏபிரகாமின் மறைவைத் தொடர்ந்து கே.எஸ். சரவணமுத்து பாடசாலை நிர்வாகத்தை ஏற்றார். இக்காலகட்டத்தில் தென்மராட்ச்சியில் ஆங்கிலக் கல்வியின் தேவை பெரிதும் உணரப்பட்டது. இப்பாடசாலையில் பெருந்தொகையான மாணவர்கள் ஆங்கிலக் கல்வியைப் பெறக்கூடியதாக இருந்தது. S.S.L.C வகுப்பு களுடன் (Londno Matirculation) லண்டன் மற்றிகுலேசன் வகுப்புகளும் ஆரம்பிக்கப்பட்டன. 1941 ஆம் ஆண்டு முதன் முதலாக லண்டன் மற்றிக்குலேசன் பரீட்சைக்கு மாணவர்கள் தோற்றிச் சித்தியடைந்தனர். பாடசாலை முதன்மையான பாடசாலையாகப் பெயர்பெற்றது.

இக்காலத்தில் கல்வித்துறையில் மேதைகளாக விளங்கிய உடுவில் மகளிர் கல்லூரியின் அதிபராக இருந்த எல்.ஜி.புக்வோல்டரும் யாழ்ப்பாணக் கல்லூரியின் துணை அதிபராக இருந்த ஜே.வி.செல்லையாவும் டிறிபேர்க் கல்லூரியின் வளர்ச்சிக்குப் பெருமளவில் உதவி செய்தனர். ஆங்கிலக் கல்வியை விரும்பி தூர இடங்களைச் சேர்ந்த மாணவர்களும் இங்கு வந்து இணைந்துகொண்டனர். ஆண் மாணவர்கள் தங்கியிருந்து கல்வி கற்கக்கூடியதாக விடுதி வசதிகளும் காணப்பட்டமை மாணவர்களுக்குச் சாதகமாய் அமைந்தது. பச்சிலைப்பள்ளி, கரைச்சி, துணுக்காய், பூநகரி, வரணி ஆகிய இடங்களில் இருந்தும் மாணவர்கள் இணைந்துகொண்டனர். மாணவர், ஆசிரியர் தொகையை நோக்கினால் 1875 ஆம் ஆண்டு 71 மாணவர்களுடனும் இரண்டு ஆசிரியர்களுடனும் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலையில், 1931ஆம் ஆண்டில் 173 மாணவர்களும் 11 ஆசிரியர்களும் 1945ஆம் ஆண்டில் 535 மாணவர்களும் 19 ஆசிரியர்களுமாக இணைந்தமை சடுதியான ஒரு அதிகரிப்பைக் காட்டியது. 1950ஆம் ஆண்டில் 1047 மாணவர்களும் 44 ஆசிரியர்களும் 1964ஆம் ஆண்டில் 1231 மாணவர்களும் இணைந்துகொண்டமை கல்லூரியின் வளர்ச்சிப் பாதையைப் கோடிட்டுக்காட்டுகின்றது. அதிபராக இருந்த கே.எஸ்.சரவணமுத்து மிக நீண்டகாலமாக அதாவது 25 வருடங்கள் கல்லூரியின் வளர்ச்சிக்காகத் தன்காலம் முழுவதையும் அர்ப்பணித்து வாழ்ந்து 1955ஆம் ஆண்டில் சேவையிலிருந்து இளைப்பாறினார்.



அவரின் ஓய்வைத் தொடர்ந்து ஏ.கே.சபாபதிப்பிள்ளை கல்லூரியின் அதிபரானார். தொடர்ந்து திரு. கே.வி.தம்பிநாயகம், என.சபாநாயகம், கே.பாலச்சந்திரன், கே.சிவபாதசுந்தரம், எம்.நாகேந்திரராஜா, கே.அருந்தவபாலன், என்.ஜெயகுமார் ஆகியோர் அதிபர்களாகப் பொறுப்பேற்று அர்ப்பணிப்புடன் அரும்பெரும் சேவையாற்றி பாடசாலையை வளர்ச்சிப்பாதையை நோக்கிக் கொண்டு சென்றனர்.

1961ஆம் ஆண்டு இலங்கையில் சகல பாடசாலைகளும் தேசியமயமாக்கப்பட்டது. டிறிபேர்க் கல்லூரியும் அரச பாடசாலையாக்கப்பட்டது. அரச பாடசாலையாக்கப்பட்ட பின்னர் சகல மாணவர்களுக்கும் தத்தம் மதங்களைப் படிக்கவும் சமய விழாக்களைக் கொண்டாடவும் முடிந்தது. இவ்வாறு படிப்படியான வளர்ச்சிகளுடனும் பெருமையுடனும் மிளிர்ந்துநின்ற பாடசாலை 1990ஆம் ஆண்டளவில் நாட்டின் அசாதாரண சூழ்நிலைகளினால் பல இடர்பாடுகளைச் சந்திக்க வேண்டியதாயிற்று குறிப்பாக 1995ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட மிகப்பெரிய இடம்பெயர்வைத் தொடர்ந்து தென்மராட்சிக்கு வந்த மக்களுக்குத் தங்குமிடம் அளிக்கவேண்டிய தேவை பாடசாலைகளுக்கு இருந்தது. தொடர்ந்து 2000ஆம் ஆண்டு ஏற்பட்ட தென்மராட்சி அனர்த்தத்தின்போது தென்மராட்சி மக்கள் ஒட்டுமொத்தமாக இடம்பெயர்ந்து வன்னி, வலிகாமம், வடமராட்சி நோக்கிச் சென்றனர். இரண்டு வருடகாலம் இந்நிலை நீடித்தது. இக்காலத்தில் சாவகச்சேரி நகர்புறப் பாடசாலைகள் பெரும் அழிவுக்குட்பட்டன. 2002ஆம் ஆண்டு மக்களின் மீள்குடியேற்றத்தின்போது பாடசாலையை இயக்கமுடியாத நிலை காணப்பட்டது. அந்நேரம் அதிபர் பொறுப்பில் இருந்தவர் எம்.நாகேந்திரராசா. கே.அருந்தவபாலன் துணை அதிபராக இருந்தார். பல்வேறு தரப்பினரின் ஒத்துழைப்புடன் கல்லூரி வளாகம் தூய்மைப்படுத்தப்பட்டு, தற்காலிகக் கொட்டைகைகள் அமைக்கப்பட்டு கல்விச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன.

இந்தவகையிலே G.T.Z நிறுவனம், நிக்கொட் நிறுவனம், சுவிஸ் அபிவிருத்தி நிறுவனம், உலக வங்கி ஆகியவை சேதமடைந்த கல்லூரியின் கட்டடங்களைப் புனரமைத்தும், புதிய கட்டடங்களை நிர்மாணித்தும் உதவின. இவ்வமைப்புகளின் உதவியினால் இன்று இக்கல்லூரி போதிய பௌதீக வளங்களுடன் கம்பீரமாகக் காட்சியளிக்கின்றது. அதிபர் எம்.நாகேந்திரராஜாவின் அவர்களின் சேவை ஓய்வைத் தொடர்ந்து க.அருந்தவபாலன் அதிபர் பதவி யேற்று முன்னைய அதிபரின் பணியைத் தொடர்ந்தார். க.அருந்தவபாலனும் கல்லூரியின் வளர்ச்சியில் அதீத அக்கறையுடன் செயற்பட்டார். தென்மராட்சி அனர்த்தத்தின்போது கல்லூரி அதிபர்களாகக் கடமையாற்றி இவர்கள் இருவரினதும் சேவையும் போற்றிப் பாராட்டப்படவேண்டியதாகும். அழிவடைந்த பாடசாலையை மீளக் கட்டியெழுப்பியதில் இவர்களின் பங்கு காத்திரமானது.

க.அருந்தவபாலனின் சேவை ஓய்வைத் தொடர்ந்து என். ஜெயக்குமார் அதிபர் பதவியேற்றார் இவரும் அர்ப்பணிப்பான சேவையைச் செய்தார் தொடர்ந்து 11.06.2018இல் செ.பேரின்பநாதன் அதிபர் பொறுப்பையேற்று இன்றுவரை சேவையாற்றி வருகின்றார் இவரும் முன்னைய அதிபர்கள் போலவே தமது கடமையில் கண்ணும் கருத்துமாக இருந்து கல்லூரியை நெறிப்படுத்திவருகின்றார். கல்லூரியின் தோற்றம் தொட்டு இன்றுவரை சுமரர் 150 வருடங்களாக ஆயிரக்கணக்கான ஆசிரியப் பெருந்தகைகள் இங்கு கடமையாற்றிச் சென்றுள்ளனர், கடமையாற்றுகின்றனர். இவர்கள் பல்லாயிரக்கணக்கான மாணவர்களுக்கு கல்வியறிவூட்டி, வழிகாட்டி, ஒளியூட்டியுள்ளனர். இங்கு கற்ற மாணவர்கள் இன்று உலகின் நாலா பக்ககங்களிலும் வியாபித்து நல்ல பதவிகளைப் பெற்று, மிக்க பொருளாதார வளமுடன், சிறந்த பண்பாளர்களாக வாழ்ந்து தாம் கற்ற கல்லூரிக்குப் பெருமை சேர்த்துக்கொண்டிருக்கின்றனர். இவர்களுக்கெல்லாம் வழிகாட்டிகளாக விளங்கிய முன்னாள் அதிபர்களும் ஆசிரியர்களும் பாராட்டப்பட வேண்டியவர்கள். கௌரவிக்கப்படவேண்டியவர்கள் நன்றியுடன் நினைவு கூரப்படவேண்டியவர்கள் இவர்களால் கல்லூரி அன்னை பூரிப்படைகின்றாள், பெருமையுறுகிறாள்.

இவ்வாறு பெருமைபெற்ற இக்கல்லூரி 150 ஆவது ஆண்டு நிறைவுவிழாவை இவ்வருடம் கொண்டாடுகின்றது. அதிபர் செ.பேரின்பநாதனுக்குக் கிடைத்த இவ்வரிய சந்தர்ப்பத்தை அவர் நன்கு திட்டமிட்டு நடத்திக் கொண்டிருக்கிறார். கடந்த வருடம் சித்திரை மாதத்தில் இருந்து மாணவர் நடைபவணி, விளையாட்டுப் போட்டி, மரநடுகை, பழைய மாணவர் அனுபவப்பகிர்வுத் தூய்மைப் பணி போன்ற 10 செயற்பாடுகளை முன்னெடுத்து நடைமுறைப்படுத்திவருகின்றனர். 08.04.2025இல் டிறிபேர்க் கல்லூரியின் 150ஆவது ஆண்டு நிறைவு நாளை நினைவுகூர்ந்து கொண்டாடப்படுகின்றனர். 150வது வருடநிறைவையொட்டி 10.04.2025, 11.04.2025, 12.04.2025 ஆகிய மூன்று நாள்களும் பல்வேறு செயற்பாட்டு நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. டிறிபேர்க் எனும் சஞ்சிகையும் வெளியிடப்படவுள்ளது. இச்சஞ்சிகையானது கல்லூரி மாணவர்களின் பல்வேறு திறன்களையும் சாதனைகளையும் கல்லூரி நிகழ்வுகளையும் வெளியுலகிற்கு எடுத்துக்காட்டுகின்ற அதேவேளை வருங்கால சந்ததியினருக்கு வழிகாட்டும் வரலாற்று ஆவணமாகவும் அமையும் என்பதில் ஐயமில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அ.ஷர்மி
நானாட்டான், மன்னார்

# மன்னாரை மகிமைப்படுத்தும் பிளமிங்கோக்கள்




ஒப்பீட்டளவில் சிறிய தீவான இலங்கையில் பல்வேறு நிலப்பரப்புகள் உள்ளன. அவை ஒவ்வொன்றும் பலதரப்பட்ட வாழ்க்கையையும் மற்றும் வளமான கலாசார மரபுகளையும் கொண்டுள்ளன. அந்தவகையில் வடமேற்குக் கடற்கரைகளில் உள்ள மன்னார் தீவானது இன்று மிகச் சிறந்த சுற்றுலாத் தலமாகக் காணப்படுகின்றது.

மனிதர்களை மட்டுமல்லாது மனிதரல்லாத பறவைகளையும் ஈர்க்கும் தன்மைகொண்ட சிறப்பிற்குரிய ஒரு தீவுதான் மன்னார். மன்னார் தீவானது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த, கலாசார முக்கியத்துவம் வாய்ந்த இடம் மட்டுமல்லாமல் பறவைகளின் சொர்க்க பூமியாகவும் புகழ்பெற்றுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் டிசெம்பர் மாதம் தொடக்கம் மார்ச் மாதம் வரையில் வண்ணமயமான இளஞ்சிவப்பு பிளமிங்கோக்கள் மன்னாருக்கு வருகைதந்து நடமாடித் திரியும் காட்சியைக் காண்பதற்குக் கோடிக்கண்கள் வேண்டும்.


மன்னாரின் ஆழமற்ற மண் அடுக்குகள் மற்றும் உப்பு ஏரிகள் என்பன அதிக எண்ணிக்கையிலான குளிர்காலப் பறவைகளைக் கவர்கின்றன. பருவகாலத்தில் பிளமிங்கோக்கள் உணவு தேடியும், வானிலை மாற்றத்திற்காகவும் இனப்பெருக்க ஜோடிகளைத் தேர்ந்தெடுப்பது உள்ளிட்ட பல காரணங்களுக்காகவும் தங்களது நாட்டில் இருந்து இலங்கைக்கு இடம்பெயர்வதாகக் கூறப்படுகிறது.

ஆனால், முன்பிருந்த அளவுக்குத் தற்போது பிளமிங்கோக்கள் வருகைதருவதில்லை. சதுப்புநிலங்கள் பல அழிந்துவிட்டதால் பறவைகள் இடம்பெயர்வது குறைவடைந்துள்ளது. அத்துடன் சதுப்புநிலங்களை அழிக்கும் மனித செயற்பாடுகளால் இன்று வலசைப் பறவைகள் பெரும் பாதிப்புகளை எதிர்கொண்டுள்ளன. சதுப்புநிலங்கள் எனப்படுவது விலைமதிப்பற்ற வாழ்விடங்கள். அவற்றைப்பேணிப் பாதுகாப்பதற்கு நாம் முன்வரவேண்டும்.









# ஓவியர் மாற்குவின் காண்பியக் காட்சி


இலங்கைத் தமிழர் மத்தியில் நவீன ஓவியத்தைப் பிரபலப்படுத்திய, ஓவியர் அ.மாற்குவின் ஓவியங்களுக்கான காண்பியக் காட்சி அண்மையில் நடைபெற்றது. மாற்குவின் மாணவர்கள் மற்றும் குடும்பத்தினர் இணைந்து குறித்த காண்பியக் காட்சியை ஏற்பாடுசெய்திருந்தனர். ஓவியர் மாற்குவால் உருவாக்கப்பட்ட நூற்றுக்கு அதிகமான கலைப்படைப்புகள் இதன்போது காட்சிப்படுத்தப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 30 . 08 . 1960

மறைவு 06 . 04 . 2025



## சதாசிவம் கந்தையா துரைராசா கலைச்செல்வம் (செல்வம்)

இணுவில் கிழக்கை பிறப்பிடமாகவும் இணுவில் மேற்கை வதிவிடமாகவும் கொண்ட துரைராசா கலைச்செல்வம் (செல்வம்) கடந்த (06.04.2025) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரைராசா - விசாலாட்சி தம்பதியினரின் பாசமிகு மகனும், காலம் சென்றவர்களான பத்மநாதன் சுந்தரம் ஆகியோரின் அன்பு மருமகனும் அருந்தவமலரின் ஆசை கணவரும் காலஞ்சென்ற நடராசா, இராசா, தம்பித்துரை, சதாசிவம் மற்றும் மனோன்மணி, மீனாட்சி ஆகியோரின் பெறாமகனும் காலம் சென்ற முத்துப்பிள்ளை, ஞானம்மா, சிற்றபேசு, சண்முகநாதன், கனகனாயகம், திருவிளங்கம் ஆகியோரின் அன்பு மருமகனும் நிர்மலா, கந்தையா , கலையரசி (சுவிஸ்) , தேன்மொழி , சிவலோகநாதன் ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலம்சென்ற நாகநாதன் மற்றும் விமலநாயகி .விநாயகமூர்த்தி (சுவிஸ்), பாஸ்கரன், பிருந்தா காலம்சென்ற சிவசுப்பிரமணியம் மற்றும் தர்மகுலராணி ஆகியோரின் அன்பு மைத்துனனும் கணேசலிங்கத்தின் அன்பு சகலனும் துரேசன் (பிரான்ஸ்), சிவபாலன் (முகாமையாளர் நியூ குளோபல் பிசினெஸ் சிஸ்டம்) சேந்தன் (MLT கொழும்பு பல்கலைக்கழக மருத்துவபீடம், நவலோகா வைத்தியசாலை) சிவமயூரன் (வெளிவாரி யாழ்ப்பாண பல்கலைக்கழகம் ) தேசிகன் (SDB Bank வவுனியா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுதர்சினி (பிரான்ஸ் ). தர்சிகா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.04.2025) புதன்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரிகைகளுக்காக பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

பாப்பா தோட்ட வீதி,
இணுவில் மேற்கு, இணுவில்.

தகவல்:
குடும்பத்தினர்
077 203 6537, 077 274 5792

(CS 2918) J-1

# St. John's College, Jaffna Old Boys' Association

## OBA DAY AND THE ANNUAL GENERAL MEETING

OBA Day and the 107th Annual General Meeting of the Old Boys' Association of St. John's College, Jaffna will be held on Saturday 26th April, 2025 at St. John's College.

### PROGRAMME FOR THE DAY

07.00 am – Service at the St. John the Baptist Church
08.00 am – Breakfast
09.00 am – Annual General Meeting

### AGENDA

1. Prayer
2. Condolences
3. President's Address
4. Minutes of Last AGM
5. Annual Report
6. Principal's Review
7. Statement of Accounts
8. Resolutions (if any)
9. Amendment to the Constitution (if any)
10. Election of Executive Committee

10.00 am – Cricket Match (Old Boys vs Present Boys)
12.30 pm – Fellowship Lunch
01.30 pm – Cricket Match (Continues)
04.00 pm – Principal's Tea
04.30 pm – Soccer Match

**Kindly accept this as official invitation.**

Members who wish to submit resolutions are kindly requested to do so in writing on or before 16th April 2025 by e-mail to 'sjcobajaffna@gmail.com'.

Electronic version of the constitution and the proposed amendments could be obtained from the secretary on request.

*Contribution for OBA Day -*

*Contacts: Mr. P.Rubenthiran - 0773013654*

Sgd.
**Revd. J.D.Philip,**
Secretary,
Old Boys' Association,
St. John's College, Jaffna.

Sgd.
**Mr. V.S.B.Thuseetharan,**
Principal,
St. John's College,
Jaffna.

# கூட்டம்

சாவகச்சேரி, ஏப்.9

வலி.கிழக்கு ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் பொதுக்கூட்டமும் நிர்வாகசபைத் தெரிவும் பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெற்றது. நிர்வாகத் தெரிவில் தலைவராக மு.விக்னேஸ்வரா, செயலாளராக அ.அருந்தவநேசன், பொருளாளராக இ.இராசசேகரம், உப தலைவராக நா.ஜீவன், உப செயலாளராக இ.குணநாதன், நிர்வாக உறுப்பினர்களாக கெ.இராஜரட்ணம், வ.சிவலைலாதேவி, கணக்காய்வாளராக என். சிவசீலன் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

(ச-41)

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 15.08.1954

மறைவு 07.04.2025

எமது நிறுவனத்தில் நீண்ட நாட்களாக கணக்காளராக கடமை ஆற்றும் மதிப்பிற்குரிய சச்சிதானந்தன் அவர்களின் பாசமிகு பாரியார்

## சச்சிதானந்தன் சரோஜா

அவர்களின் மறைவு செய்தி கேட்டு ஆழ்ந்த துயரடைகின்றோம் மேலும் அன்னாரின் பிரிவால் துயரிற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

மைதிலி நகைமாடம் 89V
யாழ் மைதிலி ஜுவெல்லர்ஸ் 79Z
உரிமையாளரும், ஊழியர்களும்.

(CR/44791) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுக்கூட்டமும் நிர்வாகத்தெரிவும்


## ராஜா பிளாசா அறக்கொடை நிதியத்தின் உதவி வழங்கும் நிகழ்வு 2025



ராஜா பிளாசா அறக்கொடை நிதியத்தின் ஊடாக
மறைந்த இரும்புக் கடை அன்னன்
**அமரர் சந்திரசேகரம்பிள்ளை குபேந்திரநாதன்**
நினைவாக பாடசாலை மானவர்கள், சமூக நிறுவனங்கள் மற்றும் 100 வீட்டுத் திட்ட பயனாளிகளுக்கான உதவி வழங்கும் நிகழ்வு
காலம் : 09. 04.2025 புதன்கிழமை நேரம் பிற்பகல் 3 மணி
இடம் : ஆசி மட அரசடி விநாயகர் திருமண மண்டபம் கோண்டாவில் கிழக்கு
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
ராஜா பிளாசா
அறக்கொடை நிதியத்தினர்


யாழ்ப்பாணம், ஏப். 9
மட்டுவில் வடக்கு ஊரிப்பிட்டி இந்துமயான அபிவிருத்திச் சபையின் வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத்தெரிவும் மட்டுவில் கண்ணகை சனசமூக நிலைய மண்டபத்தில் இன்று புதன்கிழமை பி.ப. 3 மணிக்கு இடம் பெறும்.

மட்டுவில் மற்றும் சந்திரபுரம் கிராம அலுவலர் பிரிவுகளைச்சேர்ந்த பொதுஅமைப்புகளின் பிரதிநிதிகள், பொதுமக்கள், நலன்விரும்பிகள் என அனைவரையும் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர்.

(ச-25,9)



# தேர்தல் அலுவலகத் திறப்பும் பரப்புரைக்கூட்டமும்

முல்லைத்தீவு, ஏப்.9
புதுக்குடியிருப்பு உள்ளூர் அதிகாரசபையின் புனித வளநகர் வட்டாரத்துக்குரிய இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின் தேர்தல் அலுவலத் திறப்பு நிகழ்வும், தேர்தல் பரப்புரைக்கூட்டமும் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்றது. நிகழ்வில் இலங்கைத் தமிழ் அரசுக்கட்சியின் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் து. ரவிகரன், புனிதவளநகர் வட்டார இலங்கைத்தமிழரசுக்கட்சியின் மேலதிக வேட்பாளர் திருமதி.தயாபரன் மேரிரோசலீன், முப்புரம் வட்டார முதன்மை வேட்பாளர் சிவபாதம் குகநேசன், கோம்பாவில் வட்டார முதன்மை வேட்பாளர் சந்திரசேகரம் கிருபாகரன், கட்சியின் செயற்பாட்டாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

(ச-25, 246)


## மரண அறிவித்தல்



தோற்றம்
02
12
1940

மறைவு
08
04
2025

**துரைச்சாமி பஞ்சாட்சரம்**

பூநாறி வீதி கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட துரைச்சாமி பஞ்சாட்சரம் நேற்று (08.04.2025) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான துரைச்சாமி - பரிமளம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - சிவபாக்கியம் (தண்ணீரூற்று, முள்ளியவளை, முல்லைத்தீவு) தம்பதியரின் அன்பு மருமகனும், கமலம் அவர்களின் அன்புக் கணவரும், வாசவன் (ஆசிரியர்), கேசவன் (ஆசிரியர்- யா/கொக்குவில் இந்துக்கல்லூரி), வானதி (ஆசிரியர்- யா/காரைநகர் இந்துக்கல்லூரி), ஆகியோரின் பாசமிகு தந்தையும், பரணீதரன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர் கட்டடங்கள் திணைக்களம் யாழ்ப்பாணம்), சசிரேகா (அபிவிருத்தி உத்தியோகத்தர் கமநல சேவைகள் திணைக்களம் புத்தூர்), ஜீவாஜினி (விரிவுரையாளர் யாழ்ப்பாணம் ஆசிரியர் வாண்மை விருத்தி நிலையம், கோப்பாய் ஆசிரியர் கலாசாலை) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், நகுலேஸ்வரி, சர்வேஸ்வரி, சந்திரவதி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சஞ்ஜீவினி, அபிராம், அனிருத், ஆரதி, ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (09.04.2025) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**
**077 659 0427, 077 538 0020**
**075 098 5397**

**பூநாறி வீதி,**
**கொக்குவில் மேற்கு.**

(CS/57932) J-1



## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
15
07
1948



விண்ணில்
13
04
2022

**சபா தியாகராஜா**
**(ஓய்வுபெற்ற பிராந்திய கணக்காளர் - இ.போ.ச)**
திதி: துவாதசி

ஆண்டுகள் மூன்று ஆனதுவோ
எங்கள் அன்பு அப்பாவை பிரிந்து
உங்கள் கம்பீர தோற்றத்திலும்
காந்தர்வ குரலிலும்
கட்டுண்ட நினைவுகள் கொண்டே
எங்கள் நாட்கள் நகர்கின்றன
எங்கள் நாட்சார் வீட்டிலும்
நல்லூரான் வீதிகளிலும்
ஞானவைரவர் வாசலிலும்
உங்களை இன்றும் உணர்கின்றோம்.
உங்கள் அன்பும் ஆசியும் என்றும்
எங்களை வழிப்படுத்தும்
நிம்மதியாய் உறங்குங்கள் அப்பா
உங்கள் நினைவோடு என்றும் நாங்கள்..

ஆனைப்பந்தி,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்

(CS/57933) J-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களை வெளிப்படுத்துங்கள் நூல் அறிமுகம் இன்று!

ஊடகக் கற்கைகள் துறையின் ஊடகக் கழகம் நடத்தும், 'உங்களை வெளிப்படுத்துங்கள்' நூல் அறிமுகம் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் கலைப்பீட கருத்தரங்க மண்டபத்தில் இன்று மாலை 3 மணியளவில் நடைபெறவுள்ளது. ஊடகக் கழகத்தின் தலைவர் தங்கராசா விதுஷன் தலைமையில் இந்த நிகழ்வுகள் நடைபெறவுள்ளன. வரவேற்புரையை ஜெயகாந்தன் கனிஷ்ராவும், நூல் அறிமுக உரையை ஊடகக் கற்கைகள் துறை விரிவுரையாளர் அருள்பிரகாசம் கிரிஜாவும் நிகழ்த்தவுள்ளனர். (ம)

# 30,000 அரசாங்க வெற்றிடங்களை நிரப்புவதற்கு அரசு நடவடிக்கை!

கொழும்பு, ஏப். 9

அரச சேவையில் அத்தியாவசிய வெற்றிடங்களை நிரப்புவதற்காக பட்டதாரிகள் மற்றும் இளைஞர் யுவதிகள் 30 ஆயிரம் பேரை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

காரணமாக வேலையற்ற பட்டதாரிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளமையும், தற்போதுள்ள அரச நிதிநிலைமையையும் கருத்தில் கொண்டு, அரச சேவையில் 30 ஆயிரம் வெற்றிடங்களை நிரப்புவதற்கு ஜனாதிபதி முன்வைத்த பரிந்துரைக்கே அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது. (ம)

## பேரழிவை...

புத்தளத்தில் இடம்பெற்ற தேர்தல் பரப்புரையில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்தபோதே, அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தற்போதைய அரசாங்கத்தின் பொய்கள் மற்றும் ஏமாற்று நடவடிக்கைகளால் நாட்டு மக்கள் பெரும் விரக்தியில் ஆழ்ந்துள்ளனர். விண்ணை முட்டும் பொருள்களின் விலையேற்றத்தால் வாழ்க்கைச் சுமை அதிகரித்துள்ளது. இவ்வாறான நிலையில், அமெரிக்க அதிபர் ட்ரம்ப் விதித்துள்ள 44 வீதமான வரிகள் நாட்டுக்குப் பெரும் பொருளாதாரப் பேரழிவை ஏற்படுத்தியுள்ளன.

முறையான பொருளாதார வேலைத்திட்டம் இன்மையால் நாடு பொருளாதார அழிவை நோக்கிச்சென்று கொண்டிருக்கிறது. இன்றைய நிலவரப்படி எரிபொருள் மற்றும் எண்ணெய் மானியங்கள் வழங்கப்படவில்லை. உரமானியமும் வழங்கப்படவில்லை. அரசாங்கம் இந்த வரிக்கொள்கை தொடர்பில் சரியான நிலைப்பாட்டில் இல்லை. அரசாங்கம் உறக்கத்தில் முட்டாள்தனமாகப் பேசி வருகின்றது.

இவ்வாறேபோனால் நாடு பொருளாதார ரீதியாக பெரும் ஆபத்தில் விழும். இந்த பாரதூரமான பிரச்சினைக்கு அரசாங்கத்திடம் இருந்த வந்த ஒரே தீர்வு, குழுவொன்றை நியமிப்பது மட்டுமே. உடனடி நடவடிக்கைகளை மேற்கொண்டு ஆரம்பகட்டப் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றிருக்கவேண்டும். அது நடக்கவில்லை - என்றார். (அ-ம-இ)

## இந்தியாவுடனான...

இல்லை. எந்தவொரு நாட்டாலும் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை விலைக்கு வாங்கமுடியாது என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கைக்கான பயணத்தின்போது, இரு நாடுகளுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட ஏழு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் தொடர்பில் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் நாடாளுமன்றத்தில் நேற்று விளக்கமளித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கைக்கும், இந்தியாவுக்கும் இடையில் பாதுகாப்பு ஒத்துழைப்பு ஒப்பந்தமே கைச்சாத்திடப்பட்டது. அது பாதுகாப்பு ஒப்பந்தம் அல்ல. பாதுகாப்பு 'ஒத்துழைப்பு' ஒப்பந்தமென தெளிவாகக் கூறப்பட்டுள்ளது. இரு நாடுகளிலும் அமுலில் உள்ள உள்நாட்டுச் சட்டம் மற்றும் தேசியக்கொள்கை ஆகியவற்றுடன் முரண்படாத விதத்திலும், சர்வதேச கட்டுப்பாடுகளுக்கு எவ்வித தாக்கங்களும் ஏற்படாத வகையிலும்தான் குறித்த ஒப்பந்தம் அமைந்துள்ளது.

குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம் நடவடிக்கை இடம்பெறும்போது தேசியச் சட்டம், இராணுவச் சட்டம், அரசுகளின் சுயாதீனம், ஆட்புல ஒருமைப்பாடு என்பன மீறப்படமாட்டாது என ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. அதேபோல உள்விவகாரங்களில் தலையிடமுடியாது. இலங்கைக்கும், இந்தியாவுக்கும் இடையில் தற்போதும் முப்படைகளுக்கிடையில் பயிற்சிகள் நடக்கின்றன. உபகரணங்கள் வழங்கப்படுகின்றன. அவற்றைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதற்குரிய ஒப்பந்தமே இது. தகவல் பரிமாற்றமும் உள்ளடக்கப்பட்டுள்ளது. உயிர்த்தஞாயிறுத் தாக்குதலின் போது இந்தியாவே முதன்முதலாக புலனாய்வுத் தகவலை வழங்கியது. இப்படியான விடயங்கள் மட்டுமே மேற்படி ஒப்பந்தத்தின் பிரகாரம் நடைபெறும்.

இந்தியாவுக்கு எதிராக இலங்கையின் நிலப்பரப்பைப் பயன்படுத்த இடமளிக்கமாட்டோம் என ஏற்கனவே தெளிவாகக் கூறிவிட்டோம். சீனாவில் பிரிவினைவாத பிரச்சினை ஏற்பட்டால்கூட சீனாவுக்கு எதிராக நாம் எமது நாட்டு நிலப்பரப்பை பயன்படுத்த இடமளிக்கமாட்டோம். இது எமது கொள்கை.

இந்தியாவுடன் இரகசிய ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்படவில்லை. தகவல் அறியும் சட்டத்தின்கீழ் அவற்றைப் பெறலாம். நாட்டின் ஆட்புல ஒருமைப்பாடு மற்றும் இறையாண்மைக்காக உயிரைப் பணயம் வைத்து போராடியவர்கள் நாம். எனவே, எந்தவொரு நாடாலும் எம்மை விலைக்கு வாங்கவும் முடியாது. அடிபணியவைக்கவும் முடியாது-என்றார். (அ-ம-44)

## அமெரிக்க வரிகள்...

அமெரிக்காவின் வர்த்தகப் போரை எதிர்கொள்வதற்கு, ஜனாதிபதி அநுரவின் தலைமையில் பல்வேறுபட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. இந்த விடயம் தொடர்பில் ஜனாதிபதி அநுரவால், அமெரிக்க அதிபருக்குக் கடிதமொன்றும் அனுப்பப்பட்டுள்ளது. அந்தக் கடிதம் கிடைத்துள்ளதை அமெரிக்காவும் உறுதிப்படுத்தியுள்ளது. அத்துடன், அமெரிக்கப் பொருள்களுக்கு இலங்கை விதிக்கும் வரிகள் தொடர்பிலும் நாம் மதிப்பாய்வுகளை மேற்கொண்டு வருகின்றோம்-என்றார். (அ-ம-44)

## பிள்ளையான்...

களத்தினர் இந்தக் கைது நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர்.

ஈஸ்டர் தாக்குதலுடன் தொடர்புடைய குற்றச்சாட்டுக்களுக்காக பிள்ளையான் அண்மைக்காலமாக தொடர் விசாரணைகளை எதிர்கொண்டு வந்தார். எதிர்வரும் 21ஆம் திகதிக்கு முன்னர், ஈஸ்டர் தாக்குதலுடன் தொடர்புடைய பிரதான குற்றவாளியொருவர் கைதுசெய்யப்படுவார் என்று ஜனாதிபதி அநுரவும் கூறியிருந்தார்.

ஆதலால், ஈஸ்டர் தாக்குதலுடன் தொடர்புடைய குற்றச்சாட்டுக்காக அவர் கைது செய்யப்பட்டுள்ளாரா? என்பது தொடர்பில் பலத்த சந்தேகங்கள் எழுந்துள்ளன. எனினும், பத்திரிகை அச்சுக்குப் போகும் வரை கைதுக்கான காரணம் தொடர்பில் தகவல் வெளியாகவில்லை. (அ-ம-இ)

## பயங்கரவாதத்...

குட்படுத்தப்படவேண்டும் என்பதே தற்போது நடைமுறையிலுள்ள பயங்கரவாதச் சட்டமாகும்.

பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்படவேண்டும் என்ற நிலைப்பாட்டில் நாம் உறுதியாகவுள்ளோம். ஆனால், தற்போது சில குற்றச்செயல்கள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுப்பதற்காக வேறு சட்டமொன்று நாட்டில் இல்லை. எனவே, தற்போது இருக்கும் சட்டத்தையே விரும்பியும், விரும்பாமலும் பயன்படுத்தவேண்டியுள்ளது.

தற்போதைய பயங்கரவாதத் தடைச்சட்டத்தை, தொடர்ந்தும் நடைமுறையில் வைத்திருக்க நாங்கள் விரும்பவில்லை. எனவே, மாற்றுச் சட்டமொன்று கொண்டுவரப்பட்ட பின்னர், தற்போதைய சட்டம் நீக்கப்படும்-என்றார். (அ-ம-இ)

## மாடுகடத்தல்...

வீதிக் கண்காணிப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார், லொறி ஒன்றை மறித்து சோதனைக்கு உட்படுத்திய போதே, இந்தக் கடத்தல் முறியடிக்கப்பட்டதுடன், 20 மாடுகளும் மீட்கப்பட்டன. முதற்கட்ட விசாரணையின்போது, மல்லாவி பகுதியில் இருந்து குருநாகல் பகுதிக்கு அந்த மாடுகள் கடத்தப்பட்டதாகத் தெரியவந்துள்ளது. சந்தேகநபர்கள் மூவரையும் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-ம-110)

## அமெரிக்க...

தீர்த்துக்கொள்ளமுடியும் என நம்புவதாக அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அமெரிக்காவின் வரி விதிப்பு இலங்கைக்கு மட்டும் பிரச்சினையில்லை. அது உலக நாடுகள் பலவற்றுக்குப் பிரச்சினை. இவ்வாறிருக்கையில், இந்த விடயத்தை இலங்கைக்கு மட்டுமான பிரச்சினையாகக் காண்பிப்பதற்கு பலர் முயற்சிக்கின்றனர். அரசாங்கத்தைப் பலவீனப்படுத்தும் அவர்களின் முயற்சிகள் வெற்றிபெறாது. உயர்மட்டக் கடந்துரையாடல்கள் மூலம் இந்த விவகாரத்தில் வெற்றிபெறுவோம்-என்றார். (அ-ம-44)

## தென்னக்கோனை...

அமைக்கும் தீர்மானம் நாடாளுமன்றத்தில் நேற்று நிறைவேற்றப்பட்டுள்ளது.

தென்னக்கோனை பதவியில் இருந்து அகற்றுவது தொடர்பான பிரேரணையை நாடாளுமன்ற உறுப்பினர் லக்மாலி ஹேமசந்திர முன்வைத்தார். இதனைத் தொடர்ந்து ஆளும் தரப்பின் பிரதம கொறடாவான நளிந்த ஜயதிஸ்ஸ குறித்த பிரேரணை மீதான வாக்கெடுப்பைக் கோரினார். இந்த வாக்கெடுப்பு 151 வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது. எவரும் எதிராக வாக்களிக்கவில்லை.

தென்னக்கோனுக்கு எதிராக விசாரணைக்குழு அமைக்கும் விடயத்தை எதிர்க்கவில்லை. ஆனால், அவர் தொடர்பான வழக்கொன்று நிலுவையில் உள்ளது. ஆதலால், இந்த வழக்கை வேறுவிதமாகக் கையாண்டிருக்க வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நிசாம் காரியப்பர் தெரிவித்தார். (அ-ம-44)

## அர்ஜுன்...

அழைத்துவருவோம். அதற்கான முயற்சிகள் தொடர்கின்றன என்று அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடக சந்திப்பு அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்றது. இதன்போது எழுப்பட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அர்ஜுன் மகேந்திரனை பிடியாணை ஊடாக நாட்டுக்கு கொண்டுவருவதற்குரிய முயற்சியை நாம் இன்னும் கைவிடவில்லை. இராஜதந்திர ரீதியில் இவ்விடயத்தை கையாள வேண்டியுள்ளது. சிங்கப்பூரின் சட்டங்கள் தொடர்பில் கவனத்திற்கொள்ளவேண்டியுள்ளது என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால், நாம் முயற்சியைக் கைவிடவில்லை - என்றார். (அ-ம-44)

## மருத்துவமனை...

பட்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

நேற்றுமுன்தினம் தீவிர சிகிச்சைப்பிரிவில் சேர்க்கப்பட்ட அவர், நேற்று சாதாரண விடுதிக்கு மாற்றப்பட்டு சிகிச்சை வழங்கப்பட்டுவருகின்றது. (அ-ம-26)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பொங்கல் விழா

யாழ்ப்பாணம், ஏப். 9

வரலாற்றுப் பிரசித்திபெற்ற தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலயத்தின் நீண்டகால பாரம்பரியம் மிக்க வருடாந்தப் பொங்கல் விழா நேற்றுச் செவ்வாய்க்கிழமை மிகவும் பக்திபூர்வமாக நடைபெற்றது. காலை அம்பாளுக்குச் சிறப்பு அபிஷேக பூசை வழிபாடுகள் இடம்பெற்றதைத் தொடர்ந்து ஆலய முன்றலில் பானை வைத்தலுடன் வருடாந்தப் பொங்கல் விழா ஆரம்பமானது.

அதனைத் தொடர்ந்து மாலை வரை ஆலயச் சூழலில் நூற்றுக்கணக்கான அடியவர்கள் பொங்கல் பொங்கி வழிபாடுகள் ஆற்றினர். (ச-66)



# சென்.மேரிஸ் சம்பியன்

பொற்பதி சென்.பீற்றர்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்திய வடமாகாண உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழகம் வெற்றிக்கிண்ணத்தைத் தனதாக்கியது.

ரப்பியல் அரியதாஸ், மேரி றெஜினா ஞாபகார்த்த பொற்பதி சமூக சேவை ஒன்றியத்தினூடாக பருத்தித்துறை லீக் அனுமதியுடன் பொற்பதி சென்பீற்றர்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் 9 பேர் கொண்ட மாபெரும் வடமாகாண உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதி ஆட்டம் அண்மையில் கழகத்தலைவர் செ.டிசாந்த் தலைமையில் ஆரம்பமானது. இறுதி ஆட்டத்தில் நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக் கழகமும், இமையாணன் மத்தி விளையாட்டுக்கழகமும் மோதிக்கொண்டன. பரபரப்பான இறுதி ஆட்டத்தில் இரு கோல்களைப் பெற்று நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக் கழகம் வெற்றியீட்டியது. நாவாந்துறை சென்.மேரிஸ் விளையாட்டுக்கழகத்துக்கு வெற்றிக் கிண்ணத்துடன், 5 லட்சம் ரூபா பணப்பரிசும் வழங்கப்பட்டது.

இரண்டாம் இடத்தைப் பெற்ற இமையாணன் மத்தி விளையாட்டுக் கழகத்துக்கு வெற்றிக்கேடயமும், இரண்டு இலட்சம் ரூபா பணப்பரிசும் வழங்கப்பட்டது.

சிறந்த வீரர்கள், ஆட்டநாயகன் விருதுகளும், பணப் பரிசில்களும் வழங்கப்பட்டன. (எ-33)



# திருமஞ்சத் திருவிழா

யாழ்ப்பாணம், ஏப்.9

தாவடி ஸ்ரீ அம்பலவாண வேதவிநாயகர் ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருவிழாவின் திருமஞ்சத் திருவிழா நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது. இதன்போது நூற்றுக்கணக்கான அடியவர்கள் புடைசூழ, மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட திருமஞ்சத்தில் விநாயகப்பெருமான் பவனி வந்தார். (ச-41-66)

# கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஏப். 9

ஏழாலை இலந்தைகட்டி பாதாள ஞானவைரவர் ஆலய மகா கும்பாபிஷேகம் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9.06 மணி முதல் முற்பகல்10.05 மணி வரையுள்ள சுபவேளையில் இடம்பெறவுள்ளது.

கும்பாபிஷேகத்துக்கான பூர்வாங்கக் கிரியைகள் கடந்த திங்கட்கிழமை ஆரம்பமானது. நாளை வியாழக்கிழமை காலை 9 மணி முதல் மாலை03 மணி வரை அடியவர்கள் எண்ணெய்க்காப்புச் சாத்தும் நிகழ்வு இடம்பெறும் என ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர். (ச-66)

## காணி விற்பனைக்கு

நீர்வேலி, சிறுப்பிட்டியில் இரண்டு பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. ஒரு பரப்பின் விலை 12 இலட்சம்.

தொடர்பு: 077 820 9424 (CS 30006) A

## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



தோற்றம் 21 - 12 - 1955

மறைவு 12 - 03 - 2025

கடந்த 12.03.2019 புதன்கிழமை அன்று சிவப்பதம் அடைந்த எமது குடும்பத் தலைவர்

### அமரர் செல்வராசா இரத்தினகுமார்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நாளை மறுதினம் (11.04.2025) வெள்ளிக்கிழமை காலை 4.30 மணி அளவில் ஊறணி தீர்த்த கரைமடத்தில் நடைபெற்று அஸ்தி கரைக்கப்படும். பின்னர் நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் மதிய போசன நிகழ்வு நடைபெற உள்ளது அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனை தொடர்ந்து நடைபெறும் மதிய போசண நிகழ்விவும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**இவ் அழைப் பினை தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக் கொள்ளவும்.**

வைகுண்டம் ஒழுங்கை, வல்வெட்டித்துறை.

குடும்பத்தினர்
(CS/30015) J-1 076 436 5713

## போட்டோக் கொப்பி இருபக்கம் 3/-

(1st Team Paper 2025)

கல்விச் சமூகத்தோடு ஒன்றிய நிறுவனம் 0760 53 83 29

## A/L - CHEMISTRY

2025 Batch : Physical Chemistry & Paper Class

பிரிவு 1 Mon - FRI 5.30 am to 6.30 am

பிரிவு 2 Mon - FRI 6.00 pm to 7.30 pm

2026 Batch: Gases

ஆசிரியர், திரு.S. சுரேஸ்குமார் Bsc (Hons) PGDE

Smart Science Acadamy

154 A, Navalar Rd, Jaffna

077 555 9028

## காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் வடமராட்ச்சி கரவெட்டி அல்வாய் கிழக்கில் 20 பரப்பு (நிலப்பரப்பு) விற்பனைக்கு உண்டு**

- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் இருவழி பாதையுடன்
- 1 பரப்பின் விலை
- ✓ பிரதான வீதி முகப்புடன் பதினேழு லட்சம் ரூபா (17,000,00)
- ✓ இரண்டாம் காணி பதினைந்து லட்சம் ரூபா (15,000,00)
- ✓ பின் பகுதி காணி எட்டு லட்சம் ரூபா (8,000,00)
- நெல்லியடி பஸ்நிலையம் 2 1/2 KM, பருத்தித்துறை பஸ் நிலையம் 2 KM, மந்திகை ஆஸ்பத்திரி 1 KM பருத்தித்துறை வீதி 600M, மாலு சந்தி 1 KM தூரம்
- கரவெட்டி பிரதேசசபை 1 KM தூரம்
- தம்பசெட்டி மெதடிஸ்த மிசன் வித்தியாலயம் 1 KM தூரம், மாலுசந்தி பிள்ளையார் கோயில் 1 KM தூரம்
- குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி, செம்மண் தரை நன்னீர் ஊற்று
- தரகர் தேவையில்லை

**(பார்வையிடும் நேரம் காலை 8.00 - மாலை 6.00 வரை)**

தொடர்பு: 076 860 2770, 076 987 8617, 076 935 3971



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 09.04.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.